விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 177 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 31 சனிக்கிழமை (14.06.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829






திருவுளச்சீட்டு ஊடாக

## சாவகச்சேரி நகர சபை முன்னணி வசமானது

தவிசாளராக வ.சிறிபிரகாஸ் தெரிவு

(யாழ்ப்பாணம்)

திருவுளச்சீட்டு மூலம் சாவகச்சேரி நகர சபை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வசமானது.

15ஆம் பக்கம் பார்க்க

## நல்லூர் பிரதேச சபை தமிழ் மக்கள் கூட்டணி வசம்

தவிசாளராக ப.மயூரன் தெரிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை தமிழ் மக்கள் கூட்டணி வசமான நிலையில் அதன் தவிசாளராக பத்மநாதன் மயூரன் தெரிவாகியுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க



ஈ.பி.டி.பியின் ஆதரவுடன்

# யாழ்.மாநகர சபையை கைப்பற்றியது தமிழரசுக்கட்சி

சபை முதல்வராக மதிவதனி விவேகானந்தராஜா தெரிவு

(யாழ்ப்பாணம்)

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஆதரவுடன் யாழ். மாநகர சபையை இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றியது. சபை முதல்வராக மதிவதனி விவேகானந்தராஜா தெரிவானார்.

யாழ்.மாநகர சபையின் முதல்வரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் நேற்று வெள்ளிக்கிழமை காலை யாழ்.மாநகர சபை சபா மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்.மாநகர சபை 45 உறுப்பினர்களைக் கொண்ட சபையாகும்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி 13 ஆசனங்களையும் அகில இலங்கை தமிழ்

02ஆம் பக்கம் பார்க்க



## வடமராட்சி செம்பியன்பற்றில் மீனவர்கள் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்றுப் பகுதியில் நேற்று மீனவர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு செம்

15ஆம் பக்கம் பார்க்க



## அஹமதாபாத் விமான விபத்து

தொடர்பில்
மேலதிக செய்திகள் உள்ளே...

## ஆட்சி அமைக்க ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி

எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆட்சியை இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்ற ஒத்துழைத்த எமது கட்சியின் உறுப்பினர்

15ஆம் பக்கம் பார்க்க



## இசைப்பிரியா, பாலச்சந்திரன் கொல்லப்பட்டமை தொடர்பில் விசாரணை மேற்கொள்க

சிங்கள சட்டத்தரணி ஒருவர் பொலிஸ்மா அதிபருக்குக் கடிதம்

(கொழும்பு)

இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் இறுதித் தருணங்களில் சரணடைந்த இசைப்பிரியா, பாலச்சந்திரன் பிரபாகரன் உட்பட பலர் கொல்லப்பட்டமை குறித்த போர்க் குற்றச்சாட்டு விசாரணைகளை கோரி தனுக ரணஞ்சக கஹந்த கமகே எனும் சட்டத்தரணி பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் வொன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளதாவது,

சரணடைந்தவர்களை கொன்றது தொடர்பான புகார்

02ஆம் பக்கம் பார்க்க

## ஐ.எம்.எப் நிபந்தனைகளை அமுல்படுத்த வேண்டியுள்ளது

அமைச்சர் ஹர்ஷன சூரியபெரும

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக்கொண்ட சட்ட ரீதியிலான இணக்கப்பாட்டினால் ஒருசில நிபந்தனைகளை கடுமையாக நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு காணப்படுகிறது என பதில் நிதி மற்றும் பொருளாதார திட்டமிடல் அமைச்சர் ஹர்ஷன சூரியபெரும தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வெள்

02ஆம் பக்கம் பார்க்க

## எதிர்வரும் 17ஆம் திகதி பாராளுமன்றம் கூடுகின்றது

(கொழும்பு)

பாராளுமன்றம் எதிர்வரும் 17ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை கூடவுள்ளதாக

15ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் முதலிட ஊக்குவிப்பு செய்யுங்கள்



மலேசியத் தூதுவரிடம் வடக்கு ஆளுநர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் முதலீடு செய்ய ஊக்குவிப்புச் செய்யுங்கள் என இலங்கைக்கான

02ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்து கலைஞர்களின் 'தீப்பந்தம்' திரைப்படம் ராஜா திரையரங்கில்



(யாழ்ப்பாணம்)

ஈழத்தின் உணர்வுகளைச் சுடரேற்றி உண்மைகளையும் உணர்ச்சிகளையும் பிரதிபலிக்கும்வண்ணம் தாயகக் கலைஞர்களின் முழுமையான பங்களிப்புடன் உருவாகியுள்ள "தீப்பந்தம்" முழுநீள திரைப்படமானது இன்று மற்றும் நாளை யாழ்ப்பாணம் ராஜா திரையரங்கில் மாலை 4.30 மணி காட்சிக்கு திரையிடப் படவுள்ளது.

0777147248 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு இத் திரைப்படத்திற்கான டிக்கெட்டுக்களை பெற்றுக் கொள்ள முடியும்.

இத்திரைப்படம், "புத்தி கெட்ட மனிதர்கள்", "டக் டிக் டோஸ்" போன்ற திரைப்படங்களையும், கோவா சர்வதேச திரைப்பட விழாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட "குமரி கண்ட குமரன்" ஆவணப்படத்தையும் உருவாக்கிய Blackboard International நிறுவனத்தின் மற்றொரு புதிய ஆழமான முயற்சியாகும். (ம-4,7)

## ஜேர்மன் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி அநுர சந்திப்பு

(பேர்லின்)

ஜேர்மனிக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, நேற்று (13) பேர்லினின் வெல்டொர்ப் எஸ்டோரியா ஹோட்டலில் ஜேர்மனியின் சுற்றுலா மற்றும் பயணத் தொழில் சங்கங்கள் மற்றும் வெளிச்செல்லும் பயணம்/சுற்றுலாத்துறை செயற்பாட்டாளர்கள் உடன் இடம்பெற்ற சந்திப்பில் கலந்துகொண்டார்.

இலங்கையில் நிலைபேறான சுற்றுலாத் துறைக்காக அரசாங்கம் எடுத்துள்ள சாதகமான நடவடிக்கைகள் குறித்து இங்கு தெளிவுபடுத்திய ஜனாதிபதி, விசேடமாக சுற்றுலா வசதிகளை அதிகரித்தல், ஊக்குவிப்புத் திட்டங்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்புக்காக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளை சுட்டிக்காட்டி, நிலைபேறான சுற்றுலா பொறிமுறைகள் மூலம் இலங்கை ஒரு கவர்ச்சிகரமான சுற்றுலாத் தலமாக மாறியுள்ளது என்றும் தெரிவித்தார்.

சுற்றுலாத் துறையில் மனித வளங்களை மேம்படுத்துதல், சுற்றுலாப் பயணிகளின் ஈர்ப்பை அதிகரித்தல், கலாசார மற்றும் சூழல்சார் சுற்றுலாத் துறையை ஊக்குவித்தல், சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் போன்ற விடயங்கள் குறித்து விசேட கவனம் செலுத்தியுள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (ம-4,7)

## வடக்கில்...

மலேசியத் தூதுவர் பாதில் ஹிசாமிடம் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கோரிக்கை முன்வைத்தார்.

யாழ்ப்பாணத்துக்கு பயணம் மேற்கொண்டுள்ள மலேசியத் தூதுவர், வடக்கு மாகாண ஆளுநர் தலைமையிலான குழுவினரை நேற்று முன்தினம் வியாழக்கிழமை (12) இரவு யாழ். நகரிலுள்ள விடுதி ஒன்றில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்துக்கும் மலேசியாவுக்கும் இடையிலான பாரம்பரிய உறவுகள் தொடர்பில் மலேசியத் தூதுவர் ஆளுநருக்கு சுட்டிக்காட்டினார். யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைமைகளை அவதானிப்பது தமது நோக்கம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தின் தேவைப்பாடுகள், முதலீடுகளின் அவசியம் தொடர்பில் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

விவசாயம் மற்றும் கடலுணவு தொடர்பான வளங்கள் வடக்கில் நிறைந்துள்ளன எனவும் அவை பெறுமதிசேர் உற்பத்திப்பொருட்களாக ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புக்கள் அரிது என்றும் ஆளுநர் தெரியப்படுத்தினார்.

எதிர்காலத்தில் அமையவுள்ள முதலீட்டு வலயங்களை நோக்கி மலேசிய முதலீட்டாளர்களை ஊக்குவிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

முதலீட்டுக்கான வாய்ப்புக்கள் தொடர்பான தெளிவான வரைபடத்தைக்கோரிய தூதுவர், முதலீட்டாளர்களுக்கான அனுமதிகள், சலுகைகள் தொடர்பில் விரைவான நடைமுறை தேவை என்றும் குறிப்பிட்டார். ஏனைய சில நாடுகளில் உள்ள விரைவு நடைமுறைகள் தொடர்பிலும் அவர் சுட்டிக்காட்டினார். (ம-4,7)

## ஐ.எம்.எப்...

ளிக்கிழமை (13) நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

பொருளாதார மீட்சிக்காக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் சிறந்த முறையில் அமுல்படுத்தப்பட்டுள்ளன. பொருளாதாரத் திட்டங்களை அடிக்கடி மாற்றிய மைப்பது பிரச்சினைக்குரியதாக அமையும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக்கொண்ட சட்ட ரீதியிலான இணக்கப்பாட்டினால் ஒருசில நிபந்தனைகளை கடுமையாக நிறைவேற்றவேண்டிய கடப்பாடு காணப்படுகிறது. ஆகவே சிறந்த பொருளாதார மீட்சிக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட நீடிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் முறையாக அமுல்படுத்தப்படும்.

மின்கட்டணம் உட்பட அரசாங்கத்தால் வழங்கப்படும் சேவைகள் மற்றும் இதர சலுகைகளுக்கான செலவுகளுக்குரிய வகையில் அவற்றுக்கான கட்டணங்கள் தீர்மானிக்கப்பட வேண்டும் என்பதை சர்வதேச நாணய நிதியம் அழுத்தமாக வலியுறுத்தியுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் மின்கட்டணம் 20 சதவீதத்தால் குறைக்கப்பட்டது. தற்போது வருடாந்த கட்டணத் திருத்தத்துக்கு அமைய மின்கட்டணம் 15 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. மின் கட்டணத்துடன் தொடர்புடைய இதர சேவைகளின் கட்டணங்கள் அதிகரிக்கப்படமாட்டாது என்றார். (ம-4,7)


அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



மலர்வு 01.07.1961 உதிர்வு 16.05.2025

கடந்த 16.05.2025 வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர் பாலச்சந்திரன் மகேஸ்வரி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 15.06.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 06.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கேணியில் கரைக்கப்படும் தொடர்ந்து மதியம் 12.00 மணியளவில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

(1225)

காட்டுப்புலம், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

சி.பாலச்சந்திரன் : 0779923384
பா.சந்திரகுமார் : 0779783979
பா.ராஜ்குமார் : 0766720419

தகவல் : குடும்பத்தினர்


## யாழ்.மாநகர...

காங்கிரஸ் 12 ஆசனங்களையும் தேசிய மக்கள் சக்தி 10 ஆசனங்களையும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி ஆகியன தலா 4 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன தலா ஒரு ஆசனங்களையும் பெற்றுள்ளனர்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் முதல்வர் பதவிக்கு விவேகானந்தராஜா மதிவதனியின் பெயரையும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முதல்வர் பதவிக்கு கனகையா ஸ்ரீ கிருஷ்ணாவும் பரிந்துரைக்கப்பட்டது.

முதல்வர் தெரிவு பகிரங்க வாக்கெடுப்பு மூலம் இடம்பெற்றது. அதன் போது, தமிழரசுக் கட்சி, ஈழமக்கள் ஜனநாயக கட்சி, ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பன தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட மதிவதனி விவேகானந்தராஜாவிற்கு வாக்களித்தனர்.

அதன் மூலம் 19 வாக்குகளை பெற்று மதிவதனி விவேகானந்தராஜா முதல்வராகத் தெரிவானார்.

அதேவேளை தேசிய மக்கள் சக்தி நடுநிலை வகித்தது.

துணை முதல்வராக தமிழரசு கட்சியின் உறுப்பினர் இமானுவேல் தயாளன் தெரிவாகியுள்ளார். (ம-4,7,33,104)

## இசைப்பிரியா...

சர்வதேச மனிதாபிமான சட்டமீறல் (இசைப்பிரியா மற்றும் பாலசந்திரன் பிரபாகரன் உட்பட ) தனுக ரணஞ்சக கஹந்தகமகே ஆகிய நான் இந்த மனுவை மதிப்பிற்குரிய உங்கள் அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கின்றேன்.

இது கடுமையான சர்வதேச மனிதாபிமான சட்டமீறலை குறிக்கின்றது. இந்த சம்பவங்கள் சர்வதேச சட்டத்தின் கீழ் போர்க்குற்றங்களின் கீழ் அடங்கும் என்பதுடன் பக்கச்சார்பற்ற விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

இசைப்பிரியா மற்றும் பாலச்சந்திரன் தொடர்பான சம்பவங்கள் போர் நேரத்தில் சரணடைந்தவர்களிற்கான மீறல்களைக் குறிக்கும் முக்கிய எடுத்துக் காட்டுக்கள்.

இவர்களின் இறப்புகள் குறித்து விசாரணை செய்யப்படாமல் விடக்கூடாது.

இலங்கை பொலிஸ் உண்மை, பொறுப்பு நியாயத்திற்கு வழிவகுக்கும் வகையில் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (ம-4,7)


நயினை அம்மன் திருமண சேவை

சகல சமூகத்திற்குமான உள்நாட்டு, வெளிநாட்டு திருமண சேவை, அரச உத்தியோகத்தர்கள், வெளிநாட்டு மணமகன், மணமகள்
பதிவுக் கட்டணம் இலவசம்
டச்சு வீதி, கல்வியங்காடு.
whatsapp
076 050 3863, 076 311 9485
(1228)

வேலையாள் தேவை

யாழ். நகரில் இயங்கி வரும் Printers ஒன்றிற்கு வெல்டர் வேலையாள் தேவை.

தொடர்புகளுக்கு :
076 192 3444
077 482 1912
(1227)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஏழை மக்கள் இலவச சிகிச்சை பெறும் உரிமையைப் பாதுகாப்போம்'

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு முன் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

புற்றுநோய் சிகிச்சையை குழப்பும் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்றைய தினம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இது குறித்த போரட்டத்தில் கலந்து கொண்ட அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் கருத்து தெரிவிக்கையில், இந்த மருத்துவ மனையானது வடக்கு மாகாணத்தில் உள்ள விசேடமான ஒரே ஒரு புற்றுநோய் மருத்துவமனை ஆகும். வடக்கிலிருந்து தினமும் நூற்றுக் கணக்கான நோயாளிகள் இங்கு வந்து சிகிச்சை பெறுகின்றனர். தெற்கில் இருந்து கூட பல நோயாளிகள் இந்த வைத்தியசாலைக்கு அன்றாடம் வந்து சிகிச்சை பெற்று செல்கின்றனர்.

கடந்த காலத்தில் 11 சதவீதமான மக்கள் வெளி மாவட்டத்திலிருந்து இங்கே வருகை தந்து சிகிச்சையை பெற்று சென்றனர். இதிலிருந்து நமது வைத்தியசாலை எவ்வாறு சிறப்பான சேவையை வழங்குகின்றது என்பது அனைவருக்கும் தெரியும்.

இதனை சிதைக்கும் செயற்பாடு கடந்த இரண்டு வருடங்களாக நடைபெற்று வருகின்றன. தனிப்பட்ட இலாபத்தை கருத்தில் கொள்ளாத, தன்னலமற்ற மருத்துவர்கள், நிர்வாகத்தினரால் அடக்குமுறை, பழிவாங்கல் மற்றும் பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இதனால் மக்கள் தனியார் அல்லது மகரகம வைத்திய சாலைக்கு செல்ல வேண்டிய துர்ப்பாக்கி நிலை ஏற்பட்டுள்ளது. இந்தப் போராட்டமானது தனி மனிதனுக்கானது அல்ல ஏழை மக்களுக்கானது.

ஏழை மக்கள் இலவச சிகிச்சை பெறுகின்ற உரிமையை பாதுகாக்க வேண்டும். தரமான, இலவசமான சிகிச்சையை பெறுவதை மறுக்கும் சட்ட விரோத செயற்பாடுகளிலிருந்து பாதுகாத்து, நோயாளிகளின் எதிர்காலத்திற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்றார்.

போராட்டக்காரர்கள் பல்வேறு வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தி, கோசமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். குறித்த போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் கருணைநாதன் இளங்குமரன், வைத்தியர்கள், சமூக மட்ட அமைப்பினர், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க-8-104)



## விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

அநுராதபுரம் சிறைச்சாலையின் அத்தியட்சகர் மொஹான் கருணாரத்னவை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு அநுராதபுரம் நீதவான் நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை உத்தர விட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மொஹான் கருணாரத்ன நேற்றைய அநுராதபுரம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் சிறைச்சாலையின் அத்தியட்சகர் மொஹான் கருணாரத்ன, நிதி மோசடி குற்றச்சாட்டின் கீழ் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த டபிள்யூ.எச். அத்துல திலகரத்ன என்பவரை ஜனாதிபதி பொது மன்னிப்பை பயன்படுத்தி சட்ட விரோதமாக விடுதலை செய்த குற்றச்சாட்டின் பேரில் கடந்த 8 ஆம் திகதி குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

## மின்சாரக் கட்டணம் உயர்ந்தாலும் பேக்கரி பொருட்களின் விலை உயராது

(கொழும்பு)

மின் கட்டண உயர்வுக்கு ஏற்ப ரொட்டி உள்ளிட்ட பேக்கரி பொருட்களின் விலைகளை அதிகரிக்கும் எண்ணம் இல்லை என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

உற்பத்திச் செலவில் அதிகரிக்கப்பட்ட மின்சாரக் கட்டணம் சேர்க்கப்பட்டாலும், தற்போது பேக்கரி பொருட்களின் விலையை அதிகரிக்கும் எண்ணம் இல்லை என்றும், அத்தகைய விலைகளை அதிகரிக்க வேண்டாம் என்று பேக்கரி உரிமையாளர்களிடம் அவர் கேட்டுக்கொள்வதாகவும் ஜெயவர்தன தெரிவித்தார். (க-8)

## பயணம் முடியவில்லை சர்வதேச நாணயநிதியம்

(கொழும்பு)

சில மிகவும் கடினமான மற்றும் மிகவும் தேவையான சீர்திருத்தங்களை செயற்படுத்துவதில் இலங்கை பாராட்டத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது என சர்வதேச நாணய நிதியத்தின் தகவல் தொடர்புத் துறையின் இயக்குநர் ஜூலி கோசாக் தெரிவித்துள்ளார். இந்த முயற்சிகள் உண்மையில் பலனளிக்கத் தொடங்கியுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பொருளாதார வளர்ச்சியில் வலுவான மீட்சி, குறைந்த பணவீக்கம், அதிகரித்து வரும் சர்வதேச இருப்புக்கள், மேம்பட்ட நிதி வருமான வசூல் மற்றும் கிட்டத்தட்ட முடிக்கப்பட்ட கடன் மறுசீரமைப்பு செயல் முறை ஆகிய பல முக்கிய குறிகாட்டிகளை அவர் சுட்டிக்காட்டியதுடன் இந்த முன்னேற்றங்கள், பொருளாதார நெருக்கடியின் உச்சத்திலிருந்து நாடு அடைந்த மிகப் பெரிய முன்னேற்றம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் எமது பயணம் இன்னும் முடிவடையவில்லை எனக் கூறிய அவர் கட்டமைப்பு சீர்திருத்தங்களுக்கான தொடர்ச்சியான உறுதிப்பாட்டின் முக்கியத்துவத்தைக் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

இந்த நடவடிக்கைகள், தமது நிர்வாகக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டதும், இலங்கைக்கு சுமார் 344 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி கிடைக்கும். இந்த நிலையில், நிர்வாகக் குழுவின் முடிவுக்கான சரியான திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை என்றாலும், அது சரியான நேரத்தில் பகிரங்கப்படுத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-8)

## முன்னாள் இராணுவ தளபதி காலமானர்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தின் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஹாமில்டன் வன சிங்க காலமானார். அவருக்கு வயது 91.



ஜெனரல் ஹாமில்டன் வனசிங்க இராணுவத்தின் 11ஆவது இராணுவத் தளபதியாக இருந்தவர் என்பதுடன் இவர், 1988 முதல் 1991 வரை இலங்கை வரலாற்றில் ஒரு முக்கியமான காலகட்டத்தில், இராணுவத் தளபதியாக பணி யாற்றியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட முக்கிய தேசிய பாதுகாப்புப் பொறுப்புகளை வகித்த இவர், தனது சேவை மற்றும் தலைமைத்துவத் திற்காக இலங்கை இராணுவத்தின் உயர் விருதுகளை பெற்றுள்ளார். (க-8)

## இஸ்ரேலில் உள்ள இலங்கையர்கள் அவதானமாக இருக்கக் கோரிக்கை

(கொழும்பு)

இஸ்ரேலில் உள்ள இலங்கையர்கள் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல்-ஈரானிய போர் தீவிரமடைந்து வரும் நிலையில், மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள சூழ்நிலையை எதிர்கொள்ளும் வகையில் அங்குள்ள இலங்கையர்களை அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் இஸ்ரேலுக்கு செல்லத் திட்டமிடுபவர்கள் தங்கள் விமானப் பயணங்களை தாமதப்படுத்துவது நல்லது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இஸ்ரேல் முழுவதும் அவசர கால நிலை பிரகடனப்படுத் தப்பட்டுள்ளது. மேலும் இஸ்ரேல் மற்றும் ஈரான் உட்பட பிராந்தியம் முழுவதும் விமானப் பயணங்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் இஸ்ரேலில் உள்ள இலங்கையர்கள் உணவு மற்றும் மருந்து உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை அருகில் வைத்திருக்க வேண்டும் என்று இஸ்ரேலுக்கான இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது. (க-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 40 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கான

# வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் வதிரி பொம்மேர்ஸ் அணி சம்பியன்



யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கம் நடாத்திய 40 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டியில் வதிரி பொம்மேர்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கம் நடத்திய 40 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டியின் இறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் வதிரி பொம்மேர்ஸ் அணியை எதிர்த்து யாழ்.பட்டஃபிளை அணி மோதியது.

இதில் வதிரி பொம்மேர்ஸ் அணி ஆட்ட நேர முடிவில் 10:7 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. (நி-3-90)

## வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

# கிண்ணத்தை தனதாக்கியது யாழ்.பல்கலைக்கழக அணி



யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தினரால் யாழ். மாவட்ட கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டியில் யாழ் பல்கலைக் கழக அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்ட போட்டியினை கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமையில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தியது. இதன் இறுதியாட்டத்தில் யாழ்.பல்கலைக் கழக அணியை எதிர்த்து விக்டோரியா அணி மோதியது.

இதில் நான்கு கால் பகுதிகளாக நடைபெற்ற ஆட்டத்தில் யாழ் பல்கலைக்கழக அணி 31:27 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் விக்டோரியா அணியை வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர். (3-90)

# ஓய்வு பெற்ற மறுநாளே பூரனுக்கு தலைமைப் பதவி

சர்வதேசப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற அடுத்த நாளே நியூயோர்க் அணியின் புதிய தலைவராக நிகோலஸ் பூரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் அதிரடி ஆட்டக்காரரான பூரன், தனது 29 வயதிலேயே சர்வதேசப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.



இந்த திடீர் முடிவுக்கான காரணங்கள் குறித்து பூரன் எதுவும் தெரிவிக்கவில்லை.

இந்த நிலையில், அமெரிக்காவில் நடைபெறும் மேஜர் லீக் தொடருக்கான நியூயோர்க் அணியின் புதிய தலைவராக பூரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மும்பை இந்தியன்ஸ் அணியின் உரிமையாளரான ரிலையன்ஸ் நிறுவனத்தின் மற்றொரு அணியாக இந்த நியூயோர்க் அணி உள்ளது. (நி-3)

# பெங்களூர் அணி விற்பனைக்கில்லை




இந்திய பிரீமியர் லீக் (ஐ.பி.எல்.) தொடரில் 18 ஆண்டு காத்திருப்புக்குப் பின் சம்பியன் கிண்ணத்தை வென்ற றோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணியை விற்கப்போவதாக வெளியான செய்தியை அதன் உரிமையாளரான டியாஜியோ பிஎல்சி நிறுவனம் நிராகரித்துள்ளது.


இந்தியாவில், டியாஜியோ பிஎல்சி மூலம் யுனைடெட் ஸ்பிரிட்ஸ் லிமிடெட் நிறுவனத்தால் ஆர்சிபி நடத்தப்படுகிறது. ஐ.பி.எல். கிண்ணத்தை வென்ற பின் அணியின் உரிமையை பணமாக்கும் வழிகளை அந்த நிறுவனம் தேடி வருவதாகச் செய்திகள் வெளியாகின. இதற்காக அந்த நிறுவனம் 2 பில்லியன் டொலர்களை எதிர்பார்க்கலாம் என்று ப்ளூம்பெர்க் தளம் குறிப்பிட்டிருந்தது.

வதந்திகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் விதமாக, நிறுவன செயலாளர் மிட்டல் சங்க்வி, 'மேற்கூறப்படும் ஊடக அறிக்கைகள் எல்லாம் ஊடகங்களின் அடிப்படையானதே என்பதை எங்கள் நிறுவனம் தெளிவுபடுத்த விரும்புகிறது. இது போன்ற எந்த விவாதத்தையும் நாங்கள் மேற்கொள்ளவில்லை' என இந்திய பங்குச் சந்தையின் அமைப்பான மும்பை பங்குச் சந்தைக்குத் தெரிவித்துள்ளார். 2008 ஆம் ஆண்டு பெங்களூர் அணி ஆரம்பிக்கப்பட்டபோது விஜய் மல்லையா அதன் உரிமையை வாங்கினார். பின்னர் அவர் கடன் வலையில் சிக்கியதால் டியாஜியோ பிஎல்சி தனது துணை நிறுவனமான யுனைடெட் ஸ்பிரிட்ஸ் மூலம் பெங்களூர் அணியை வாங்கும் வாய்ப்பைப் பெற்றது. இப்போது உலக அளவில் அதிக பின்தொடர்பவர்களைக் கொண்ட அணிகளில் ஒன்றாக அது உள்ளது.

பெங்களூர் அணி நீண்ட போராட்டத்துக்குப் பின் வெற்றி பெற்றாலும், வெற்றிக் கொண்டாட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் பெங்களூரில் 11 பேர் உயிரிழந்தது அந்த அணிக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகிலேயே விலை உயர்ந்த பொம்மை எது தெரியுமா?



மனித அளவிலான லாபுபு பொம்மை இந்த வாரம் 1.08 மில்லியன் யுவானுக்கு விற்பனையானதாக சீன ஏல நிறுவனம் தெரிவித்துள்ளது.

131 செ.மீ உயரமுள்ள இந்த பொம்மை பெய்ஜிங்கில் நடந்த யோங்கிள் சர்வதேச ஏலத்தில் விற்கப்பட்டது.

இப்போது அதுதான் உலகிலேயே மிகவும்விலையுயர்ந்த பொம்மை என்று ஏலதாரர்கள் கூறினார்கள்.

லாபுபு பொம்மைகள் என்பது ஹொங்கொங் கலைஞர் கேசிங் லங் என்பவரால் பத்தாண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்ட விசித்திரமான அசுர கதாபாத்திரங்கள்.

இவை பல பிரபலங்களின் ஒப்பனைக்கு பின்னர் அண்மைய ஆண்டுகளில் பிரபலமடைந்துள்ளன.

சீன பொம்மை நிறுவனமான பாப் மார்ட்டால் விற்கப்படும் லாபுபு பொம்மைகளின் விலை பொதுவாக 50 யுவான் ஆகும்.

இந்த வார ஏலம் முழுக்க முழுக்க லாபுபுவுக்கே அர்ப்பணிக்கப்பட்டது.

சுமார் 200 பேர் கலந்து கொண்ட நிகழ்வில் 48 பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டன.

ஏல நிறுவனம் மொத்தம் 3.37 மில்லியன் யுவான் திரட்டியதாக தெரிவித்துள்ளது. (8)

# விளையாட்டு மைதானம் திறந்து வைப்பு



(வவுனியா)

வவுனியா, ஓமந்தை சர்வதேசத் தரத்திலான விளையாட்டு கட்டடத் தொகுதியுடன் கூடிய தடகள விளையாட்டு மைதானம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் சுகத் திலகரத்ன வால் திறந்து வைக்கப்பட்ட இந்த மைதானம் நீண்ட காலமாக பயன்பாடு இன்றி காணப்பட்டிருந்தது.

இந்நிலையில் அண்மையில் விளையாட்டுத் துறை அமைச்சர் குறித்த பகுதிக்கு விஜயம் செய்து அது தொடர்பில் ஆராய்ந்ததன் அடிப்படையில் அண்மையில் விளையாட்டுத் துறை பிரதி அமைச்சரால் திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ. சரத் சந்திர, வவுனியா பிரதேச செயலாளர் இ.பிரதாபன், விளையாட்டுத் துறை அபிவிருத்தி பிரிவின் பணிப்பாளர் உட்பட பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (8)

# பிரமந்தனாறு குளத்தின்
## வாய்க்கால் புனரமைப்பு பணி ஆரம்பம்



(தருமபுரம்)

பிரமந்தனாறு குளத்தின் கீழான வாய்க்கால் புனரமைப்பு பணி ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று நடை பெற்றது.

கண்டாவளை பிரதேச செயலாளர் தங்கவேலாயுதம் பிருந்தாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன் ஆகியோர் கலந்து கொண்டு குறித்த புனரமைப்பு பணிகளை ஆரம்பித்து வைத்தனர்.

தேசிய மக்கள் சக்தியின் யாழ் மற்றும் கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட 3மில்லியன் (முப்பது இலட்சம் ரூபா) ரூபா செலவில் கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் குறித்த நிகழ்வில் மாவட்ட அரசாங்கதிபர் எஸ். முரளிதரன், அரச உத்தியோகத்தர்கள், பிரதேச மக்கள் என பலர் கலந்து கொண்டனர். (8-316)

# 13ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர். சிவயோகம் செல்வராசா

(இளைப்பாறிய ஆசிரியை)

திதி:தேய்பிறை சதுர்த்தி

14.06.2025



அம்மா

அடக்கமாய் அழகாய் ஆளுமையாய்
அயர்வின்றி அன்பு கொடுத்தாய்
ஆலமரமாய் எம்மை அணைத்திருந்தாய்
ஆண்டுகள் பல உருண்டாலும்
அழியாது உன் நினைவுகள்
ஆழமாய் எம்முடன்

(4536)

தோற்றம்-31.10.1928 மறைவு-07.06.2012

சுபதர்சன்,
செம்பியன் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

உங்கள் நினைவுடன்
வாழும் குடும்பத்தினர்
(பேராசிரியர் மா.சின்னத்தம்பி)

# இராசிபலன்

14.06.2025
வைகாசி 31, சனிக்கிழமை
திருதியை பிற்பகல் 3.19 மணிவரை

உத்திராடம் பின்னிரவு 12.07 மணிவரை
சுபநேரம் 2.53-4.23 மணிவரை
இராகுகாலம் 8.53-10.23 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்

சந்திராஷ்டமம்- மிருகசீரிடம், திருவாதிரை

வளவன்




வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், புதிய முயற்சிகள் கைகூடும்.




நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நெருங்கிய நட்பு கிடைக்கும், தொழில் போட்டிகள் மாறும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.




செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், நல்லவர்கள் சந்திப்புண்டு.




ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பொது நலனில் அக்கறை கூடும், கற்பனை மிகுதியான நாள்.




தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறும், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, மறைமுக எதிர்ப்புக்கள் மாறும்.




சேமிப்பு உயர்வதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், வளர்ச்சி கூடும், பொது வாழ்வில் புகழ் கூடும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பயணங்கள் கைகூடும்.




சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறும் நாள், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், மன சஞ்சலங்கள் சற்று கூடும்.




எந்தக் காரியத்திலும் நிதானத்துடன் நடந்து கொள்வது நல்லது, உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வரவைக் காட்டிலும் செலவு கூடலாம், ரோக பயமுண்டு.




நீண்ட நாட்களாக தள்ளிப்போட்டு வந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம், மனநிறைவு கூடும் நாள்.




குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம்.




நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், போசன சுகமுண்டு.

எதையும் உன்னால் செய்ய முடியாது என்று மலைக்காதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழுக்கு 891 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு

## யாழ்.மாவட்ட செயலர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் வீட்டுத் திட்டங்களுக்காக 891.30 மில்லியன் ரூபாய் நிதி கிடைக்கவுள்ளதாகவும் அதில் முதற்கட்டமாக 235 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் மாவட்ட செயலர் தெரிவித்துள்ளார்.**



யாழ்ப்பாண மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம், பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம், வீடமைப்புத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் 6 லட்சம் ரூபாய் பெறுமதியான வீட்டுத் திட்டத்திற்கான நிதி 9 இலட்சம் ரூபாவாகவும், 10 இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டுத் திட்டத்திற்கான நிதி 15 இலட்சம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர் தற்போது 9 லட்சம் பெறுமதியான 53 வீடுகளுக்கும், 15 லட்சம் பெறுமதியான 563 வீடுகளுக்குமான நிதியுமாக மொத்தமாக யாழ்.மாவட்டத்திற்கு 891.30 மில்லியன் ரூபா நிதி கிடைக்கவுள்ளது.

அதில் முதற் கட்டமாக 235 மில்லியன் நிதி ஒதுக்கீடு விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து வீட்டுத் திட்ட வேலைகளை துரிதப்படுத்துமாறு பிரதேச செயலாளர்களுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க.ஸ்ரீமோகனன், மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் எஸ்.கிருபாகரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சுரேந்திரநாதன், பிரதேச செயலாளர்கள், பிரதேச செயலக பிரதி, உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள் மற்றும் மாவட்ட செயலக திட்டமிடல் துறைசார் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (3-8)

## ஆட்டுக்கள்வர் அகப்பட்டனர்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தச்சன்தோப்பு பகுதியில் கடந்த சில நாட்களுக்கு முன்பாக திருடப்பட்ட மூன்று இலட்சம் ரூபாய் பெறுமதியான ஆறு ஆடுகளில் 5ஆடுகளை நேற்று வெள்ளிக்கிழமை காலை துன்னாலையில் வைத்து சாவகச்சேரிப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இதன்போது கடத்தலுக்கு பயன்படுத்திய வாகனம் மற்றும் 28,23 வயது நிரம்பிய இரு சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதான சந்தேக நபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (க-3-30-104)

## ரஜ உப்பு மீண்டும் ஆனையிறவு உப்பாகியது

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பிற்கு ஆனையிறவு உப்பு என மீண்டும் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

குறித்த உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பிற்கு அண்மையில் ரஜ உப்பு என பெயர் சூட்டியமை தமிழ் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியது.

இந்நிலையில் மீண்டும் அந்த உப்பிற்கு ஆனையிறவு உப்பு என பெயர் சூட்டப்பட்டது.

இந்நிலையில் குறித்த உப்பளத்தில் உற்பத்தி செய்யப்படும் உப்பானது வடக்கு மாகாணத்தில் முதற்கட்டமாக விநியோகம் செய்யப்படும் என அறிய முடிகிறது. (3-104)

## மெய்வல்லுநர் விழா

(யாழ்ப்பாணம்)

பொற்பதி அறிவாலயம் நடாத்தும் சரஸ்வதி முன்பள்ளியின் 40 ஆவது மெய்வல்லுநர் விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கொக்குவில் பொற்பதி வீதியில் அமைந்துள்ள பொற்பதி அறிவாலயத்தில் தலைவர் சண்.வாமதேவன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலயக்கல்வி அலுவலக செயற்பட்டு மகிழ்வோம் செயற்திட்ட இணைப்பாளர் சி.சிவகாந்தி, சிறப்பு விருந்தினர்களாக சமூக சேவையாளர் மகேந்திரன் சாந்தி தம்பதிகளும், கோண்டாவில் மக்கள் நலன்பேணும் அமைப்பின் தலைவர் செ.ஜெகபாலன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக கோணாவளை வைரவர் ஆலய உப செயலாளர் நாக.ஜெயக்குமார் மற்றும் வேலணை பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் வி.ஜெனார்த்தனன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (3)



யாழ். வடமராட்சி இந்து கல்லூரியின் சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பவனி நிகழ்வும், வீதி நாடகமும் நேற்று வெள்ளிக்கிழமை காலை 8:30 மணியளவில் "பிளாஸ்டிக் மாசுப்பாட்டை முடிவுறுத்துவோம்" எனும் தலைப்பில் பாடசாலை முன்றலில் இடம்பெற்றது. (படம்: கஜ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 350 | 250 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 700 | 650 | 650 | 700 |
| தக்காளி | 600 | 500 | 450 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 250 | 280 | 240 |
| கோவா | 600 | 550 | 350 | 600 |
| கரட் | 750 | 800 | 700 | 900 |
| பூசணி | 180 | 150 | 130 | 200 |
| புடோல் | 150 | 200 | 150 | 300 |
| வாழைக்காய் | 120 | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 150-300 | 400 | 380 | 400 |
| பெரிய வெங்காயம் | 150 | 130 | 150 | 550 |
| பாகற்காய் | 500 | 800 | 600 | 1000 |
| வெண்டக்காய் | 150 | 200 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 400 | 200 | 300 | 200 |
| லீக்ஸ் | 450 | 450 | 350 | 600 |
| பீற்றூட் | 500 | 550 | 350 | 600 |
| கறிமிளகாய் | 800 | 500 | 550 | 1000 |
| முருங்கைக்காய் | 1800 | 1200 | 1250 | 1000 |
| போஞ்சி | 650 | 600 | 480 | 1000 |
| கத்தரிதம்புள்ள | 150 | 350 | -- | 350 |
| கீரை - 1 பிடி | 60-120 | 150 | 100 | 100 |
| தேசிக்காய் | 300 | 400 | 280 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 150 | 100-180 | 150-200 |
| இராசவள்ளி | 600 | 600 | 550 | 600 |
| வெங்காயப்பூ | 500 | 600 | 700 | 800 |
| முள்ளங்கி | 200 | 200 | 150 | 300 |
| பொன்னாங்காணி | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 180 | 100 | -- | 250 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாச நோய்கள் அதிகரித்தாலும் கொவிட்-19 கட்டுப்பாட்டில்

## தொற்றுநோய் விஞ்ஞானப்பிரிவின் விசேட வைத்திய நிபுணர்

(கொழும்பு)

நாட்டில் கடந்த சில வாரங்களில் சளி, இருமல் மற்றும் காய்ச்சல் போன்ற சுவாச நோய்கள் அதிகரித்து வந்தாலும், கொவிட்-19 நிலைமை கட்டுப்பாட்டில் உள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக தொற்று நோயியலின் விஞ்ஞானப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் அதுல லியனபத்திரண கருத்து தெரிவிக்கையில், கொவிட்-19 இப்போது பல்வேறு சுவாச நோய்களில் ஒன்றாகவே கண்காணிக்கப்படுகிறது.

தற்போதைய நிலவரத்தின் படி, கொவிட் நோயாளிகள் தொடர்பான தனித் தரவுகள் சேகரிக்கப்படுவதில்லை. எனினும், நிலைமையின் மீது எங்களது தீவிர கண்காணிப்பு தொடர்ந்தும் காணப்படுகிறது என்றார்.

மேலும், இன்புளுவென்சா மற்றும் பிற சுவாச நோய்களின் பரவல் அதிகரித்திருப்பதை கருத்தில் கொண்டு, நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சுவாச நோய்கள் தொடர்பான கண்காணிப்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் வலுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் காய்ச்சல், இருமல் அல்லது மூச்சுத் திணறல் போன்ற அறிகுறிகள் தோன்றும் தருணங்களில், உடனடியாக மருத்துவ உதவியைப் பெற வேண்டும்.

இந்த நோய்கள் அதிகமாக பாதிக்கக்கூடியவர்களான முதியவர்கள், குழந்தைகள் மற்றும் நீண்டநாள் நோயாளிகள் அதிக கவனத்துடன் இருக்க வேண்டியது அவசியம் என்று வலியுறுத்திய அவர், மருத்துவ ஆலோசனையை தவிர்க்காமல் பெறுவது, நோய் பரவலையும் அதனால் ஏற்படும் சிக்கல் களையும் தடுக்கும் முக்கியமான வழி எனத் தெரிவித்தார். (க-8)

# சுற்றுலாவிகள் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

நடப்பாண்டின் ஜூன் மாதத்தின் முதல் 10 நாட்களில் 43 ஆயிரத்து 962 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜூன் மாதத்தில் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 362 ஆகும்.

அத்துடன், ஐக்கிய இராச்சியத்திலிருந்து 3 ஆயிரத்து 740 சுற்றுலாப் பயணிகளும், பங்களாதேஷிலிருந்து 2 ஆயிரத்து 717 சுற்றுலாப் பயணிகளும், ஜெர்மனியிலிருந்து 2 ஆயிரத்து 439 சுற்றுலாப் பயணிகளும், சீனாவிலிருந்து 2 ஆயிரத்து 403 சுற்றுலாப் பயணிகளும், அவுஸ்திரேலியாவிலிருந்து 2 ஆயிரத்து 169 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இந்நிலையில், இவ்வாண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து ஜூன் மாதம் 10 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 10 இலட்சத்து 73 ஆயிரத்து 765 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (க-8)

# விசேட சுற்றிவளைப்பு 407 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது போதைப்பொருட்களுடன் 407 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இச்சுற்றிவளைப்பில் ஹெரோயின் போதைப்பொருளுடன் 119 பேரும், ஐஸ் போதைப்பொருளுடன் 148 பேரும், கஞ்சா போதைப்பொருளுடன் 138 பேரும், மாவா போதைப்பொருளுடன் 2 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (க-8)

# துசித ஹல்லொலுவுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

தேசிய லொத்தர் சபையின் முன்னாள் நிர்வாகப் பணிப் பாளர் துசித ஹல்லொலுவவை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை மீண்டும் விளக்க மறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபைக்குச் சொந்தமான அரசு சொத்துக்களை தவறாக பயன்படுத்தியமை தொடர்பாக நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ள வழக்கு தொடர்பாகவே அவர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

துசித ஹல்லொலுவ நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (க-8)


# வடமாகாண சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் வ/து

வடமாகாண சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் பின்வரும் நிபந்தனைகளுக்கமைய செயலாளர் (114/08) வெளிக்கள உத்தியோகத்தர் (209/12) நிரந்தர பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| **1 பதவி** | - செயலாளர் (114/08) |
| **2 வெற்றிடம்** | - 01 |
| **3 சம்பள குறியீட்டு இலக்கம்** | - 114/08 (சுற்று நிருப இல 01/2021) |
| **4 சம்பள அளவுத்திட்டம்** | - 35665-460X10-480X10-45065 |

**தகைமைகள்**

A. கூட்டுறவு ஊழியர் 09 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலைப் பதவியில்/ நிர்வாக உதவியாளர் / உறுப்பினர் தொடர்பு பயிற்சி உத்தியோகத்தர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்./

கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத் திட்டப்பதவியில் முகாமை நிலைப் பதவியில்/ நிர்வாக உதவியாளர் / உறுப்பினர் தொடர்பு பயிற்சி உத்தியோகத்தர் பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

B. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப்பட்டம் / அதற்கு சமமான தகைமை. இத்தகைமையானது கணக்கியல், வியாபாரப் புள்ளிவிபரவியல் மற்றும் வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்./

இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்கியல்/ முகாமைத்துவம் / வியாபாரம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி.

அல்லது

C. கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனமொன்றில் / வர்த்தக / கைத்தொழில் / நிர்வாக முகாமையாளர் / பணிப்பாளர் சபையின் செயலாளர் / உறுப்பினர் தொடர்பு பயிற்சி உத்தியோகத்தர் பதவியில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம். / இதில் முகாமை நிலைப் பதவியில் ஆகக்குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

க.பொ.த உயர்தரப் பத்திரப் பரீட்சையில் வர்த்தக பிரிவில் மூன்று பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனமொன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம். இதில் முகாமை நிலைப் பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

| | |
|---|---|
| **5 பதவி** | - வெளிக்கள உத்தியோகத்தர் |
| **6 வெற்றிடம்** | - 01 |
| **7 சம்பள குறியீட்டு இலக்கம்** | - 209/12 (சுற்று நிருப இல 01/2021) |
| **8 சம்பள அளவுத்திட்டம்** | - 33820-370X10-385X10-41370 |

**தகைமைகள்**

A. கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் / எழுதுநர் பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./ கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் / எழுதுநர் பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்.

அல்லது

B. கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி. / க.பொ.த உயர்தரப் பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 01 ஆண்டுகால அனுபவம்.

அல்லது

C. கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த சாதாரண தரப் பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ்மொழி உட்பட 03 திறமைச் சித்தியுடன் கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தியுடன் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்.

**வயதெல்லை**

18 வயதிற்கு குறையாதவர்களாகவும் 45 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்

**சகல விண்ணப்பதாரர்களும்**

இலங்கைப் பிரஜைகளாக இருப்பதுடன் வடமாகாணத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும் உடல் மற்றும் உளத் தகுதிகளை கொண்டிருத்தல் வேண்டும் சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

**தயவு செய்து கவனிக்கவும்**

விண்ணப்பதாரி தனது முழுப்பெயர், நிரந்தர முகவரி, தற்போதைய வதிவிட முகவரி, அடையாள அட்டை இல, பிறந்த திகதி, வயது, பால், கல்வித்தகைமை, சேவைத்தகைமை ஆகிய சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பப் படிவத்தினை தாங்களே தயாரித்து பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

சம்மேளனத் தலைமையகம் கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ளது.

விண்ணப்பதாரிகள் தலைமையகத்திலும் வடமாகாணம் முழுவதும் சென்று கடமையாற்ற கூடியவராக இருத்தல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவியினை குறிப்பிட்டு 05.07.2025 ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு அனுப்பிவைத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**வடமாகாண சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் வ/து**
**2 ஆம் மாடி, மாவட்ட கூட்டுறவுச் சபைக் கட்டிடம்.**
A9 வீதி, கிளிநொச்சி

(சி-3195)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்




# கனவுகளைச் சு

# கருகிய உடலாய்

## உலகையே உலுக்கிய அஹமதா

### கனவுகள் கருகியது..!



ஏர் இந்தியா விமான விபத்தில் ராஜஸ்தானை சேர்ந்த மருத்துவர் ஒருவரின் ஒட்டுமொத்த குடும்பமும் பலியான சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ராஜஸ்தான் மாநிலம், பன்ஸ்வாராவைச் சேர்ந்த மருத்துவர் கோமி வியாஸ். இவரது கணவர் ப்ரதிக் ஜோஷி கடந்த ஆறு ஆண்டுகளாக லண்டனில் உள்ள ஒரு மென்பொருள் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார். இவர்களுக்கு இரட்டை பெண் குழந்தைகள் உட்பட மூன்று குழந்தைகள் உள்ளனர். தனது கணவருடன் லண்டனில் குடியேறுவதற்காக கோமி வியாஸ் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பாக தனது மருத்துவர் பணியை இராஜினாமா செய்துள்ளார்.

தனது மனைவியையும் மூன்று குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு லண்டன் செல்வதற்காக அண்மையில் ப்ரதிக் ஜோஷி ராஜஸ்தான் வந்துள்ளார். இந்தச் சூழலில் ஏர் இந்தியா விமான விபத்தில் ப்ரதிக் ஜோஷி, கோமி வியாஸ், அவர்களது மூன்று குழந்தைகள் என மொத்த குடும்பமும் உயிரிழந்துள்ளனர்.

விமானம் புறப்படுவதற்கு முன்னர் செல்ஃபி எடுத்து தாம் லண்டன் செல்வதை உறவினர்களுக்கு அனுப்பினார்கள்.

"புதிய வாழ்க்கையின் முதல் அத்தியாயம்" என்று நினைத்து. ஆனால் அவர்களால் இந்தியாவைத் தாண்ட முடியவில்லை .

விமானம் புறப்பட்ட சில நிமிட நேரங்களில் பயங்கரமாக விபத்துக்குள்ளாகியது. பல கனவுகளைச் சுமந்த அந்தக் குடும்பம் ஒட்டுமொத்தமாய் உயிரிழுந்து விட்டது. (சு-8)

### விதி வலிது...



இந்தியாவின் அஹமதாபாத்தில் விபத்திற்குள்ளான ஏர் இந்தியா விமானத்தில் 11 ஏ இருக்கையில் அமர்ந்திருந்த ரமேஸ் விஸ்வகுமார் சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ளார்.

இவர் இங்கிலாந்தில் இருந்து விடுமுறைக்கு அஹமதாபாத் வந்து மீண்டும் லண்டன் திரும்பும் போது விபத்தில் சிக்கியுள்ளார்.

இந்த கொடிய விபத்தில் உயிர் பிழைத்தவர் ஒருவர் இவர் மாத்திரமே. (சு-8)

### கருகிய உடலான செவிலியர்

இந்தக் கோர விபத்தில், கேரள மாநிலத்தைச் சேர்ந்த செவிலியர் ரஞ்சிதா கோபகுமாரன் (வயது - 42) இறந்தது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

லண்டனில் ஓராண்டு பணி ஒப்பந்தத்தை நிறைவு செய்யும் முன்பு தனது குடும்பத்துடன் சில தினங்கள் கழிப்பதற்காக வந்த அவர், வேலைக்காக லண்டன் விமானத்தில் பயணித்த போது தீயில் கருகி உயிரிழந்தார்.

இவர் ஓர் ஆண்டுக்கு முன்பு லண்டனுக்கு செவிலியர் வேலைக்காகச் சென்ற அவருக்கு சமீபத்தில் சொந்த ஊரில் மாநில சுகாதார சேவையில் வேலை கிடைத்தது. இதையடுத்து, பணி ஒப்பந்த காலம் நிறைவடையும் முன்பாக, சொந்த ஊருக்கு ரஞ்சிதா கடந்த வாரம் வந்தார்.

மீண்டும் லண்டனுக்கு சென்றுவிட்டு விரைவில் சொந்த ஊரில் குடும்பத்துடன் வாழ கனவு கண்ட அவரது வாழ்க்கை, தீயில் எரிந்த விமானத்துடனேயே கருகிப்போனது. (சு-8)



### கடவுளுக்கு நன்றி



பூமி சவுகான் என்ற பெண் ஏர் இந்தியா விமானத்தில் லண்டன் செல்வதற்காக டிக்கெட் புக் செய்து இருந்தார்.

விமானத்தை பிடிப்பதற்காக ஏர்போர்ட் சென்று கொண்டு இருந்தார். ஆனால், கடுமையான போக்குவரத்து நெரிசல் காரணமாக, ஏர்போர்ட் செல்வதற்கு 10 நிமிடம் தாமதம் ஆனது. அதற்குள் அவர் செல்ல இருந்த ஏர் இந்திய விமானம் புறப்பட்டுவிட்டது.

ஆனால் சில நிமிடங்களிலேயே அது கீழே விழுந்து வெடித்து சிதறியது. அந்த விமானத்தை தவறவிட்ட பூமி சவுகானுக்கு அது பெரும் அதிர்ச்சியை கொடுத்தது. அவர் கூறும்போது,

விபத்தை அறிந்து என் உடல் அப்படியே நடுங்கி போய்விட்டது. விமானத்தில் சென்றவர்கள் இறந்தை அறிந்து உடைந்து போய்விட்டேன். என்னால் பேசக்கூட முடியவில்லை. அதிர்ஷ்ட வசமாக நான் உயிர்தப்பி இருக்கிறேன். அதற்காக கடவுளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

லண்டனில் கணவருடன் வசிக்கும் பூமி, 2 வருடங்களுக்கு பிறகு விடுமுறைக்காக இந்தியா வந்துவிட்டு மீண்டும் லண்டன் செல்ல இருந்த போதுதான் இந்த விபத்து ஏற்பட்டிருக்கிறது. (சு-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# மந்து சென்றவர்கள்

# மீட்கப்பட்டனர்

## பாத் விமான விபத்து

### முன்னாள் முதல்வர் பலி



குஜராத்தின் முன்னாள் முதல்வர் வி ஜய் ரூபானி விமானத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார். குஜராத் முன்னாள் முதல்வர் விஜய் ரூபானி பிஸ்னஸ் கிளாஸ் இல். லண்டனில் வசிக்கும் தனது மகளிடம் சென்ற நிலையிலேயே விமான விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார். (க-8)

**(டில்லி)** ●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●●● **இந்தியாவின் அஹமதாபாத் நகரிலிருந்து 242 பயணிகளுடன் பிரிட்டன் நோக்கிப் புறப்பட்ட "ஏர் இந்தியா" விமானம் புறப்பட்டு சில நிமிடங்களிலேயே விபத்துக்குள்ளாகியது. உலகையே அச்சத்தில் உறைய வைத்த குறித்த விபத்தில் 250இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். குறித்த விபத்தினால் "விமானப் பயணம் பாதுகாப்பான பயணமா?" எனும் கேள்வியை மக்கள் மத்தியில் எழுப்பியுள்ளது.**

### களத்திற்கு விரைந்த மோடி



அஹமதாபாத் விமான விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேரில் ஆறுதல் தெரிவித்தார்.

விமான விபத்து நடந்த இடத்திற்கு நேரடியாகச் சென்று பார்வையிட்ட மோடி விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தியதுடன் அவர்களின் குடும்பத்தினருக்கும் தனது ஆறுதலைத் தெரிவித்தார். (க-8)

## "மே டே கால்..."


விமானம் விபத்துக்குள்ளாகும் ன் அவசர அழைப்பு வந்ததாகவும் னால் யாரும் பேசவில்லை என வல்கள் தெரிவிக்கின்றன.

"மே டே கால்" விமானமோ, கப்ப லா ஆபத்தில் இருப்பதை உணர்த் ம் வகையில் அதனை இயக்கு வரால் கட்டுப்பாட்டு அறைக்கு அனுப் பப்படும் சமிக்ஞையா கும்.

பிரெஞ்சு மொழியிலிருந்து அதாவது மெய்டர் என்றால் உதவி செய்யுங்கள் என்று அர்த்தம். இந்த வார்த்தை தான் "மே டே கால்" என உலகம் முழுவதும் அவசர உதவிக்கான அழைப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குறித்த விமானத்தின் கருப்புபெட்டி கிடைத்தால் மட்டுமே கடைசி நேரத்தில் நடந்தது என்ன என்பது தெரியவரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-8)

### விபத்துக்கான காரணம்



"இரண்டு என்ஜின்களும் செயலிழந்தது அல்லது புறப்பட்ட சிறிது நேரத்தில் பறவை மோதியது. ஏர் இந்தியா விமானம் விபத்துக்குள்ளானதற்கு காரணமாக இருக்கலாம் என்று விமானத்துறை நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

அவர்கள் மேலும் கூறுகையில், ஓடுதளத்திலிருந்து மேலெழுந்து பறக்கத் தேவையான உந்துவிசையை விமானத்தின் என்ஜின்களால் உருவாக்க முடியவில்லை என்று தெரிகிறது.

இரண்டு என்ஜின்களும் செயலிழந்திருக்கவே அதிக வாய்ப்புள்ளது.

ஏனெனில், ஓர் என்ஜின் மட்டும் செயலிழந்திருந்தால் விமானம் அந்தரத்தில் தடுமாறியிருக்கலாம்.

ஆனால், இங்கு விமானம் நிலையாக இருந்தது. பறவை மோதியதால் இந்தச் செயலிழப்பு நேர்ந்திருக்கலாம்.

விமானம் புறப்பட்ட பிறகும், அதன் சக்கரங்கள் பின்வாங்கப்படாததாலும் என்ஜின் செயலிழப்பு ஏற்பட்டிருக்கலாம்.

விமானத்தின் எடை அனுமதிக்கப்பட்ட வரம்பைவிட அதிகமாக இருந்திருக்கலாம் என்று கருத்துக்கள் பரவுகின்றன. அப்படியெனில், விமானம் புறப்பட்டிருக்கவே சாத்தியமில்லை என்று அவர்கள் கூறினார். (க-8)

## மருத்துவக் கல்லூரி வளாகத்தில்

# 7 பேர் உயிரிழப்பு

விமான நிலையம் அருகே மக்கள் நெருக்கம் மிகுந்த மேகானிநகர் பகுதியில் ள்ள பி.ஜே. அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் மருத்துவர்கள்-செவிலியர் ரின் தங்குமிடங்கள் மற்றும் மாணவர் டுதிக் கட்டடங்கள் மீது விமானம் ழுந்து வெடித்துச் சிதறியது.


இதில் 5 மருத்துவ மாணவர்கள், ஒரு துநிலை பயிற்சி மருத்துவர், சிறப்பு ருத்துவர் ஒருவரின் மனைவி உட்பட 7 பேர் உயிரிழந்தனர். 60 பேர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவக் கல்லூரி வளாகம் முழுவதும் நொறுங்கிய பாகங்களும், எரிந்த நிலையில் உடல்களும் சிதறிக் கிடந்ததாக உள்ளூர்வாசிகள் தெரிவித்தனர். மரங்கள், பிறவாகனங்களும் தீயில் கருகியதால், அவ்விடம் குண்டுவெடிப்பு நடந்த இடம் போல காட்சியளித்தது. (க-8)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெடித்துச் சிதறும் நிலையில் சிங்கப்பூர் சரக்குக் கப்பல்



இந்தியாவின் கேரள கடலில் தீவிபத்தில் சிக்கி வெடித்துச் சிதறும் நிலையிலுள்ள சிங்கப்பூர் கப்பலை, கடலில் மூழ்குவதை தடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தியாவின் கடற்படைக்கு சொந்தமான அவசரகாலச் சேவை கப்பலான "வோட்டர் லில்லி" இந்த பணியில் ஈடுபட்டுள்ளதாக இந்திய தகவல்கள் கூறுகின்றன.

கொழும்பில் இருந்து, மஹாராஷ்டிராவின் மும்பைக்கு, "வாங் ஹை 506" என்ற சரக்கு கப்பல் அண்மையில் பயணித்தது. சிங்கப்பூருக்கு சொந்தமான இந்த கப்பலில் 150இற்கும் மேற்பட்ட கொள்கலன்களில் பலவிதமான இரசாயன பொருட்கள் அடங்கியுள்ளன.

இந்த நிலையில், கடந்த 9ஆம் திகதி, கேரள கடற்பகுதியான கண்ணூர் அழிக்கால் துறைமுகத்தில் இருந்து 44 கடல் மைல் தொலைவில் பயணித்த போது, இந்த கப்பலில் இருந்த கொள்கலன் ஒன்றில் தீப்பிடித்தது. இதனால், கப்பலின் கப்ரன் உள்ளிட்ட 22 பேரும் கடலில் குதித்தனர்.

எனினும், அவர்களில் 18 பேர் மீட்கப்பட்டு கர்நாடகாவின் மங்களூரு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அதில், இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

கடலில் மூழ்கி மாயமான நான்கு பேரை தேடும் பணி தொடர்கிறது. இந்த நிலையில் கப்பல் தீயைக் கட்டுப்படுத்தும் பணியில் இரவு பகலாக இந்தியக் கடலோர காவல்படையினர் ஈடுபட்டுள்ளனர். (க-8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1993- இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: HNDIT, BEng, Software Engineer
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15630

பிறப்பு:1991-இந்து
நட்சத்திரம்:ரேவதி
உயரம்:5'5"
தகைமை/தொழில்-A/L,Cleark
எதிர்பார்ப்பு:தகுதியான பெண்
தொ.இ: B/15631

பிறப்பு:1991-இந்து
நட்சத்திரம்:பூரட்டாதி
5இல்சூரி செவ்
கி-பா- 19
உயரம் -5'5"
தகைமை/தொழில்:HNDA,லண்டன்
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: B/15632

பிறப்பு: 1987- இந்து
நட்சத்திரம்:ரேவதி
கி-பா-24
11இல்சூரி செவ்
உயரம்:5'6"
தகைமை/தொழில் -HNDA,BCom
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15633

பிறப்பு: 1995- இந்து
நட்சத்திரம்:மிருகசீரிடம்
கி-பா-8
உயரம்:5'6"
தகைமை/தொழில்: Bsc,SO
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: B/15634

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம்: அத்தம்
1இல்செவ்
கி-பா-58
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BBA, Team Lead (கனடா)
எதிர்பார்ப்பு: படித்த ஆண்
தொ.இ: G/15662

பிறப்பு-1990-இந்து
நட்சத்திரம்-ரோகினி
கி-பா-17
உயரம்: 5'4"
தகைமைஃதொழில்:Diploma,Teacher
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15664

பிறப்பு-1993-RC
நட்சத்திரம்-உத்தரம்
உயரம்-5'3"
தகைமை/தொழில்: BFA,DO
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15669

பிறப்பு-1996-இந்து
நட்சத்திரம்:சதயம்
1இல்செவ்
உயரம்: 5'2"
தகைமை/தொழில் -BSc,Software Engineer
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம், வெளிநாடு
தொ.இ: G/15672

பிறப்பு-2000-இந்து
நட்சத்திரம்:மூலம்
கி.பா-19 1/2
உயரம்: 5'4"
தகைமை/தொழில் -BSc,லண்டன்
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15675

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 394



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# அந்த ஐந்து பேர்!

இந்த ஆள்மாதிரி இந்த உலகத்திலே வேறு யாரையும் பார்க்க முடியாது சார். இவர் கோடியிலே ஒருவர் சார் என்று சில பேரை அறிமுகப்படுத்துவது உண்டு.

அப்படி என்றால் என்ன அர்த்தம்? அந்த ஆள் அபூர்வமான ஆசாமி என்று அர்த்தம். அருமையிலும் அருமையானவர் என்று அர்த்தம்.

இந்த உலகத்திலே அருமையிலும் அருமையானவர்கள் ஐந்து பேர் உண்டு. என்கிறார் ஒரு பெரியவர் (வாரியார் சுவாமிகள்) - யார் அந்த ஐந்து பேர்? தன்னுடைய பொருட்களின் கெடுதியையும் கூறும் வியாபாரி, புகழை விரும்பாத கொடையாளி, மாற்றைக் குறைத்துச் சொல்லாமல் பொன் வாங்குகின்ற வணிகர், எந்தவித இலஞ்சமும் வாங்காத உத்தியோகஸ்தர், தண்டனையை நியாயம் என்று ஒப்புக்கொள்கின்ற குற்றவாளி இந்த ஐந்து பேரும் அருமையிலும் அருமையானவர்கள். பின்னே இல்லையா? தன்னுடைய பொருட்களின் கெடுதியைக் கூறும் வியாபாரி யாராவது உண்டா?

உளுத்தம் பருப்பு ஒரு கிலோ கொடுங்கள் என்று கேட்கிறீரகள், “வேண்டாம் சார். எங்கள் கடையிலே இருக்கின்ற உளுத்தம் பருப்பு மகாமட்டம் எதிரே ஒருவன் கடை வைத்திருக்கிறான் அவர் கடையிலே இருக்கின்றது அற்புதமான பொருட்கள் அங்கே போய் வாங்குங்கள்” என்று யாராவது சொல்லுவார்களா? சொன்னால் அந்த ஆளுக்குப் புத்தி சரி இல்லை என்று நினைப்போம், அதேமாதிரிதான்.

புகழை விரும்பாத கொடையாளி இந்தக் காலத்திலே கொடையாளி ஆகுவதே புகழுக்காகத்தானே.

இடது கை கொடுப்பது வலது கைக்குத் தெரியக் கூடாது என்பார்கள். ஆனால் இன்றைக்கு எதைக் கொடுத்தாலும் இரண்டு கையாலையும் சேர்த்துக் கொடுத்துத்தான் புகைப்படம் பிடிக்கின்றோம் இடது கை வாங்குவது வலது கைக்குத் தெரியக் கூடாது என்று சொல்லலாம்.

அது இந்தக் காலத்திற்குப் பொருத்தமாக இருக்கும்.

மூன்றாவது அபூர்வமான ஆசாமி, மாற்றைக் குறைத்துச் சொல்லாமல் பொன் வாங்குகின்றவர்.

கூட்டிச் சொல்லி வாங்கினால் அவர் நிலைமை என்ன ஆகுவது? அடுத்த படியாக உள்ள அபூர்வமானவர் யார் என்றால்? எந்தவித இலஞ்சமும் வாங்காத உத்தியோகஸ்தர். உத்தியோகஸ்தர் என்றாலே அதற்கு நம் விளக்கம் என்ன தெரியுமோ? இலஞ்சம் வாங்குவதற்கு பல உத்திகளை தெரிந்து வைத்திருக்கிறவர். அதனாலேயே அவர் யோகஸ்தர் அதுதான் உத்தியோகஸ்தர்.

அப்படி ஆகிவிட்டது காலம் என்ன செய்வது!

இன்றைக்கு உலகத்திலே இலஞ்சம் வாங்காமல் கூட எப்படியாவது இருந்துவிடலாம். ஆனால் இலஞ்சம் கொடுக்காமல் யாரும் காலம் தள்ள முடியாது போல இருக்கிறதே.

இலஞ்சம் கொடுப்பதென்றாலும் வாங்குவதென்றாலும் சரி அதற்கு இந்தக் காலத்திலே சிபாரிசு வேண்டியிருக்கு சார்.

அருமையிலும் அருமையானவர்கள் ஐந்தாவது ஆசாமி யார் தெரியுமா? தண்டனையை நியாயம் என்று ஒப்புக்கொள்கின்ற குற்றவாளி, எனக்கு நீதிமன்றத்திலே பத்து வருடம் கடுங்காவல் தண்டனை என்று தீர்ப்பு சொன்னார்கள் சார்.

அது ரொம்ப ரொம்ப நியாயமான தண்டனைதான். அந்த தண்டனயைக் கொடுத்த நீதிபதி எனக்குத் தெய்வம் மாதிரி இந்த தண்டனை அவர் எனக்குப் போட்ட பிச்சை அப்படி என்று சொல்லிக் கொண்டிருப்பான்.

இப்படியெல்லாம் ஆள்களைப் பார்ப்பது மிகவும் கஷ்டம். அப்படி யாராவது எங்கேயாவது கண்ணிலே பட்டால் அவர்கள் அருமையிலும் அருமையானவர்கள் தான். அதிலே சந்தேகமில்லை.

ஒருவர் ஒரு கௌரவமான உத்தியோகத்திலே இருந்து கொண்டு இலஞ்சம் வாங்கினார்.

“ஏன் சார். இவ்வளவு கௌரவமான உத்தியோகத்திலே இருந்து கொண்டு இலஞ்சம் வாங்குகிறீர்களே. இது தவறு இல்லையா?” என்று கேட்டேன் அவரிடம்.

“இதிலே தவறு இருக்கின்றதாக நான் நினைக்கவில்லை சார் ஏன்னென்றால் இந்த கௌரவமான உத்தியோகத்தையே நான் இலஞ்சம் கொடுத்துத்தான் வாங்கியிருக்கிறேன்!” என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் கடற்கரையில் பிளாஸ்ரிக் மூலப்பொருட்கள்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் சௌத்பார் தொடக்கம் தாழ்வுபாடு உட்பட பல்வேறு கடற்கரையோர பகுதிகளில் நுண்ணிய பிளாஸ்ரிக் போன்ற சிறிய அளவிலான உருண்டைகள் இலட்சக் கணக்கில் கரை ஒதுங்கியுள்ளன.

முன்னதாக இலங்கை கடற்பரப்பில் பற்றியெரிந்த எவர்கிறீன் கப்பலில் இருந்து வெளியேறிய அதே போன்ற வடிவமுடைய பொருளே மேற்படி தொடர்ச்சியாக கரையொதுங்கி வருகிறது.

இவ்வாறான பின்னணியில் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை கரையோரக் காவல் திணைக்களம், கடற்படை, இராணுவமும்இணைந்து முதற்கட்டமாக கடற்கரை ஓரங்களில் ஒதுங்கியுள்ள குறித்த பிளாஸ்ரிக் மாதிரிப் பொருட்களை அகற்றியுள்ளனர்.

குறிப்பாக கடற் கரையோரங்களில் இலட்சக் கணக்கில் இவ்வாறான ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய நுண்ணிய பொருட்கள் காணப்படுகின்றமையினால் முழுமையாக குறித்த பொருட்களை அகற்ற முடியாத நிலை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (8-285)

# அடிக்கல் நாட்டல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் மேற்கு மாணிக்கவாசகர் சனசமூக நிலையக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டல் நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மாணிக்கவாசகர் சனசமூக நிலையத்தில், நிலையத் தலைவர் வே. நிஷாந்த் தலைமையில் இடம்பெறவுள்ளது. (3)



கிளிநொச்சி மகா வித்தியாலய சாரணிய மாணவர்களின் ஏற்பாட்டில் உலக சுற்றுச்சூழல் தினமான கடந்த 5 ஆம் திகதி சிரமதானப்பணி முன்னெடுக்கப்பட்டது. A9 வீதியின் வைத்தியசாலை முதல் பசுமைப்பூங்கா வரை சிரமதானப்பணியில் ஈடுபட்டனர். (படம்- தேவானந்தன்)

# 'யாழின் துருவம்' உதைபந்தாட்டப்போட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனம் மற்றும் வலிகாமம் உதைப்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கீரிமலை சிவானந்தா விளையாட்டுக் கழகம் நடத்தும் "யாழின் துருவம்" உதைபந்தாட்டப் போட்டியின் ஆட்டங்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளன.

இதில் நாளை பிற்பகல் 3.30 மணிக்கு கலைஒளி அணியை எதிர்த்து நியூஸ்ரார் அணியும் பிற்பகல் 4.30 மணிக்கு ஒலிம்பிக் அணியை எதிர்த்து கண்ணகி அணியும் மோதவுள்ளன. (3-90)

# கரைச்சி பிரதேச சபையின் கன்னியமர்வு

(தருமபுரம்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் கன்னியமர்வு தவிசாளர் அருணாச்சலம் வேழமாலிகிதன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

37 உறுப்பினர்களைக் கொண்ட கரைச்சி பிரதேச சபையில் இலங்கைத் தமிழரசுக்கட்சி சார்பாக 20 உறுப்பினர்களும், தேசிய மக்கள் சக்தி சார்பாக 6 உறுப்பினர்களும், ஜனநாயகத் தமிழ்த்தேசிய கூட்டணி சார்பாக 4 உறுப்பினர்களும், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் சார்பாக 2 உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக 2 உறுப்பினர்களும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பாக 1 உறுப்பினரும், சுயேட்சைக் குழு சார்பாக 2 உறுப்பினர்களும் கரைச்சி பிரதேச சபைக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

கரைச்சி பிரதேச சபையைத் தமிழரசுக்கட்சி பெரும்பான்மை ஆசனங்களைக் கொண்டு ஆட்சியமைத்தது. தவிசாளராக அருணாச்சலம் வேழமாலிகிதன், உப தவிசாளராக புஸ்பநாதன் சிவகுமாரும் தெரிவு செய்யப்பட்டு வர்த்தமானி வெளி வந்திருந்தது. முதல் கன்னியமர்வில் உறுப்பினர்களின் அறிமுக உரை மற்றும் கன்னி உரைகள் இடம்பெற்றன. (8-316)

# கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட இந்து ஆலயங்கள் மற்றும் அறநெறிப் பாடசாலைகளுடனான கலந்துரையாடல் நடைபெற்றது.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் தலைமையில், பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஆலயங்கள் மற்றும் அறநெறிப் பாடசாலைகளுக்கான ஒன்றியம் அமைக்கப்பட்டது.

மேலும் பிரதேச ஆலயங்களின் வரலாறு அவற்றின் தொன்மங்கள் என்பன தொகுக்கப்பட்டு ஒரு நூலாக வெளியிடப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மலர்க்குழு அமைக்கப்பட்டது.

இதனைவிட ஆலயங்களை சமூகப்பணி நோக்கி செயற்படுதல், அறநெறிக் கல்வியை ஊக்குவித்தல், புனரமைக்கப்பட வேண்டிய ஆலயங்கள் தொடர்பான விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

அறநெறி மாணவர்களின் திறன்களை ஊக்குவிக்கும் முகமாக அவர்களது ஆக்கங்களைக் கொண்ட நூல் ஒன்றினை வெளியீடு செய்வது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக் கலந்துரையாடலில் உதவிப் பிரதேச செயலாளர், கலாசார உத்தியோகத்தர், தலைமைப்பீட கிராம அலுவலர், ஆலய நிர்வாகத்தினர், அறநெறிப் பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (8)

# அங்குரார்ப்பண நிகழ்வு




(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகத்தில் செயலக சேவை நடைமுறை தொடர்பான செயலியை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு நேற்று நடைபெற்றது

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகத்தின் மக்களுக்கான சேவை இலகுவாக வழங்கும் வகையில் நடைமுறைப்படுத்தும் செயலியை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு நேற்றுக் காலை 10 மணிக்கு கண்டாவளை பிரதேச செயலாளர் த. பிருந்தாகரன் தலைமையில் நடைபெற்றது

இதில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பாராளுமன்ற உறுப்பினர்களான ஜெ. ரஜீவன் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் மற்றும் துறை சார்ந்த திணைக்களங்களின் தலைவர்கள், பிரதேச மட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்

இலங்கையின் முதலாவது பொதுமக்கள் சேவையை வழங்கும் இந்தச் செயலி கண்டாவளை பிரதேச செயலகத்தில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

இதே வேளை கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கண்டவளை பிரதேச செயலகத்தினால் இணைய வழி பங்கீட்டு அட்டையும வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-315-316)

# வீதி விபத்துக் குறித்து விழிப்புணர்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வீதி விபத்து தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு கடந்த வியாழக்கிழமை உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் செல்வி இராச்சியலச்சுமி சுப்பிரமணிய குருக்கள் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில்,

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி ஆதித்தன் கலந்துகொண்டு வீதி விபத்துக்களை தடுப்பது தொடர்பாகவும், வீதியில் பயணிக்கும் போது அவதானமாகப் பயணித்தல் ஒருவருக்கு விபத்து ஏற்பட்டால் அவரை மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்குரிய வழிமுறைகள் உட்பட பல்வேறு விழிப்புணர்வுக் கருத்துக்களை வழங்கினார். (8-8)



உலக இரத்ததான தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகம் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த இரத்ததான முகாம் நேற்று வெள்ளிக்கிழமை, காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் இடம் பெற்றது. (படம்- கஜி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 798





எங்கள் குலத்தைச் சேர்ந்த மனுநீதிச் சோழன் பசுவுக்கு நியாயம் வழங்குவதற்காக தன் குமாரனையே பலி கொடுக்கவில்லையா! நீ புறாவை விட, பசுவை விட மட்ட மானவன் அல்ல. உனக்கு நான் நியாயம் வழங்க மறுக்கமாட்டேன். இவனை நான் விசாரிக்கும் வரையில் பொறுமையாயிரு! வல்லவரையா! உன் பிரயாணத்தைப் பற்றிய மற்ற விபரங்களைச் சொல்லுவதற்கு முன்னால், கந்தமாறனுடைய குற்றச்சாட்டுக்கு நீ மறு மொழி சொல்லிவிடுவது நல்லது. என்ன சொல்லுகிறாய்? இவனை நீ பின்னாலிருந்து முதுகில் குத்தியது உண்மையா? அப்படியானால், அத்தகைய வீர லட்சணமில்லாத, நீசத்தனமான காரியத்தை ஏன் செய்தாய்? எதற்காகச் செய்தாய்?" என்று கேட்டான்.

"இளவரசே! நான் இந்த வீராதி வீரனைக் குத்தவும் இல்லை முதுகில் குத்தவும் இல்லை அதுவும் பின்னால் மறைந்து நின்று முதுகில் குத்தவே இல்லை. முதுகில் குத்தப்பட்டு நினைவிழந்து இரத்த வெள்ளத்தில் கிடந்தவனைத் தோளில் தூக்கிக் கொண்டு போய்ச் சேந்தன் அமுதன் வீட்டில் போட்டுக் காப்பாற்றினேன். ஆனால் அப்படி இவன் உயிரைக் காப்பாற்றியதற்காக நான் இப்போது வருத்தப்படுகிறேன். இவனை மார்பிலே குத்திக் கொல்லாமற் போனோமே என்று பச்சாதாபப்படுகிறேன். சிநேக தர்மத்தை முன்னிட்டு என் அரசருக்குச் செய்ய வேண்டிய கடமையைப் புறக்கணித்து விட்டேன். ஐயா! இவன் என்னைச் சிநேகத்துரோகி என்று சொன்னான். ஆனால் இவன் சிநேகத்துரோகி மட்டுமல்ல எஜமானத்துரோகி. இவன் முதுகில் குத்தப்பட்டது எங்கே, எந்தச் சந்தர்ப்பத்தில் என்று கேளுங்கள்! தஞ்சாவூர்க் கோட்டையின் இரகசிய சுரங்க வழியாக இவன் யாரைப் பழுவேட்டரையர் அரண்மனையில் கொண்டு போய்விட்டுத் திரும்பினான் என்று கேளுங்கள், பெரிய பழுவேட்டரையரின் பொக்கிஷ நிலவறையில் இவன் அன்றிரவு யாரைப் பார்த்தான் என்று கேளுங்கள். ஆடி மாதம் பதினெட்டாம் பெருக்கு தினத்தில் இவனுடைய கடம்பூர் மாளிகையில் என்ன நடந்தது என்று கேளுங்கள். அன்றைக்கு அங்கே மூடுபல்லக்கில் மறைந்து கொண்டு வந்தது யார் என்று கேளுங்கள்!

இந்தச் சமயத்தில் கந்தமாறன், உடல் நடுங்க, நாக் குழற, "அடே! அற்பப் பயலே! நிறுத்து உன் அபத்தப் பேச்சை! இல்லாவிட்டால் இதோ இந்த வேலுக்கு இரையாவாய்!" என்று கூறி வேலைக் கையில் எடுத்தான்.

ஆதித்த கரிகாலன் அவனுடைய படபடப்பைக் கண்டு சிறிது வியப்படைந்தான். கந்தமாறனுடைய கையிலிருந்த வேலைப் பிடுங்கித் தனது இரும்பையொத்த கரங்களினால் அதன் அடிக்காம்பை வளைத்தான். வேல் படார் என்று முறிந்தது. அதன் இரு பகுதிகளையும் ஆதித்த கரிகாலன் வீசித் தூர எறிந்து விட்டு, "ஜாக்கிரதை! என் சிநேகிதர்கள் என் முன்னாலேயே சண்டையிடுவதை நான் சும்மா பார்த்துக் கொண்டிருக்க முடியாது பார்த்திபேந்திரா! இவர்களில் யாராவது இனி வேலையோ, வாளையோ கையில் எடுத்தால் உடனே அவனைச் சிறைப்படுத்துவது உன் பொறுப்பு!" என்றான்.


உடனே வந்தியத்தேவன் தன்னிடமிருந்த வாளை எடுத்துப் பார்த்திபேந்திரனிடம் கொடுத்தான். பார்த்திபேந்திரனும் வேண்டாவெறுப்பாக அந்த வாளைப் பெற்றுக் கொண்டான். "கந்தமாறா! உன்னுடைய குற்றச்சாட்டுக்கு வல்லவரையன் மறுமொழி கூறினான்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## கலப்படம்



ராசாராமன் என்னும் வியாபாரி கிளியூர் என்னும் ஊரில் வாழ்ந்து வந்தான். கிளியூர் சிறு ஊர், அங்குள்ள மக்கள் அப்பாவிகள். ஆனால் ராசாராமன் வியாபாரம் செய்வதில் படுபுத்திசாலி. எப்பேர்பட்ட சரக்கையும் விற்று பணமாக்கி விடுவான்.

அந்த ஊரில் அவன் கடை மட்டுமே இருப்பதால் அந்த ஊரில் உள்ளவர்களும் வேறு வழியில்லாமல் அவனிடமே பொருளை வாங்குவர். இதனால் எப்படியும் நம்பி டம்தானே வாங்க வருவார்கள் என்ற நம்பிக்கையில், கடையில் பலசரக்குகளில் கலப்படம் செய்து வியாபாரம் செய்வான். இதனால் பலர் உடல் நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டதும் உண்டு. என்ன செய்வது? அவனை தவிர அந்த ஊரில் பணம் போட்டு கடை நடத்த முடியாதே?

ஒரு நாள் மதியம் மூன்று மணி இருக்கலாம் கடையில் கூட்டமும் இல்லை ஒரு கார் வந்து கடை ஓரத்தில் வந்து நின்றது. காரில் இருந்து நவநாகரிகாமான ஒருவர் இறங்கி கடையை நோக்கி வந்தார்.

ராசாராமன் வருபவர் பெரும் பணக்காரராய் இருக்கவேண்டும் என்று முடிவு செய்தான். வந்தவரின் நடை உடை பாவனைகள் அப்படி இருந்தன. இங்க ராசா ராமன்னு? அவனிடமே கேட்டார்.

நான்தான் ராசாராமன், நீங்க யாரு? உங்களுக்கு என்ன வேணும்? நான் பக்கத்து நகருக்குள்ளே மொத்த விற்பனை கடை வைத்திருக்கிறேன். எங்கள் கடையில் மொத்த சரக்கை உங்களை மாதிரி ஊருக்குள்ளே இருக்கிற சின்ன கடையில் நாங்களே கொண்டு வந்து விநயோகம் பண்ணிடுவோம். அதுக்கான விலையும், உங்களுக்கு வியாபாரம் ஆன தொகையை வாரமோ இல்லை பத்து நாளைக்கு ஒரு தடவையோ எங்க ஆட்கள் வந்து வசூல் பண்ணிவிடுவார்கள் பக்கத்து ஊரிலே இதை பற்றி பேசும் போது உங்களை பற்றி சொன்னார்கள், அது தான் உங்களை பாக்க வந்திருக்கிறேன். நீங்கள் உங்கள் பணம் எதுவும் முதல் கடையில் போட வேண்டாம். எங்கள் பொருட்களை போட்டு வியாபாரம் பண்ணுங்கள், உங்களுக்கு விற்றதில் இருபது சதவிகிதம் எடுத்துக்கொள்ளுங்கள் பாக்கியை நாங்க வாங்கி கொள்கிறோம்.

இது நல்ல ஒப்பந்தமாக தெரிந்தது ராசாராமனுக்கு, தான் இனிமேல் சொந்த காசு போட்டு கொள் முதல் செய்ய வேண்டியதில்லை. பொருட்கள் அவர்கள் கொண்டு வந்து போட்டு விடுவார்கள். நான் அதனை விற்று லாபம் பார்த்து விடலாம், அவர்கள் போட்ட பொருட்களுக்கு எண்பது சதவிகிதம் கொடுத்தால் போதும், அது போக அவர்கள் கொடுக்கும் பொருட்களில் நம் பொருட்களையும் கலப்படம் செய்து விட்டால் இன்னும் கொஞ்சம் பணம் அதிகமாக கிடைக்கும் என்று மனக்கணக்கு போட்டு பார்த்தான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

> நீ நடந்து போக பாதை இல்லையே என்று கவலைப் படாதே, நீ நடந்தால் அதுவே பாதை.
> – அடொல்வ் ஹிட்லர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மனித மனங்களை எரித்த விமான விபத்து

குஜராத் மாநிலத்தின் அகமதாபாத் விமான நிலையத்திலிருந்து லண்டன் புறப்பட்ட விமானம் விழுந்து நொருங்கிய சம்பவம் மனித மனங்களை எரித்துக் கருக்கிவிட்டது.

அந்தளவுக்கு மிகக் கோரமான விபத்தாக அது அமைந்துவிட்டது. 242 பயணிகளுடன் லண்டன் புறப்பட்ட ஏயார் இந்தியா விமானம் ஒரு சில நிமிடங்களில் வீழ்ந்துபோனதால், 241 பயணிகள் உடல் கருகி உயிரிழந்தனர். இதில் ஒருவர் மட்டும் உயிர் பிழைத்துள்ளார்.

தவிர, குறித்த விமானம் மருத்துவப்பீட மாணவர்கள் தங்கியிருக்கின்ற விடுதியின் மேல் வீழ்ந்து நொருங்கியதால் அந்த விடுதியில் இருந்த மருத்துவ பீட மாணவர்கள் பலர் உயிரிழந்திருக்கலாம் என்ற தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்த வகையில் தற்போதைய நிலைவரப்படி, விமான விபத்துக் காரணமாக 265 பேர் உயிரிழந்துள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை கட்டட இடிபாடுகளை மீட்கும் பணி நடந்து கொண்டிருக்கின்றது.

அகமதாபாத்தில் நடந்த விமான விபத்து உலகம் முழுவதிலும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சுருங்கக்கூறின் குறித்த விமான விபத்துச் சம்பவம் உலகம் முழுவதையும் கண்ணீர் சிந்த வைத்துள்ளது எனலாம்.

இதைவிட இறந்தவர்கள் பற்றிய தகவல்களை அறியும்போது, இஃது என்ன மனித வாழ்க்கை என்ற விரக்தியே மிஞ்சுகிறது.

ஆம், தாய் தந்தை மூன்று பிள்ளைகள் அடங்கிய ஓர் இளம் குடும்பம் இந்த விமான விபத்தில் இறந்துபோனது என்ற செய்தியையும் அந்தக் குடும்பத்தின் புகைப்படங்களையும் பார்க்கும்போது, இறைவா! நீ இருக்கிறாயா? என்று எண்ணுவதைத் தவிர வேறு எதுவும் தெரியவில்லை.

அதேவேளை, 242 பயணிகளில் ஒருவர் மட்டும் விமானத்தில் இருந்து குதித்து உயிர் தப்பியுள்ளார் என்பதையும் பத்து நிமிடங்கள் தாமதித்ததால் பிரஸ்தாப விமானத்தைத் தவறவிட்டு, அதனால் ஒரு பெண் உயிர் தப்பியதான தகவலையும் அறியும்போது கடவுளே உன்னை எப்படிப் புரிந்து கொள்வதென்று தெரியவில்லையே என்று நெக்குருக வேண்டியுள்ளது.

ஆக, குறித்த விமான விபத்துக்கான காரணம் என்ன என்பது விரைவில் தெரியவருமாயினும் கிடைத்த தகவல்களின்படி இயந்திரக் கோளாறு காரணமாகவே விமானம் விபத்துக்குள்ளாகியமை ஊர்ஜிதமாகிறது.

எனவே விமான சேவையை நடத்துகின்ற நிறுவனங்கள் தத்தம் விமானங்களின் இயங்கு நிலை தொடர்பில் மிகவும் விழிப்பாகவும் அவதானமாகவும் இருக்க வேண்டும் என்பதையே இந்த விபத்துச் சம்பவம் வலியுறுத்தி நிற்கிறது.

இந்தத் தகவலோடு, விமான விபத்தால் ஏற்பட்ட உயிரிழப்பால் நம் தமிழ் மக்கள் மிகுந்த வேதனையடைந்துள்ளனர் என்பதையும் இங்கு பதிவு செய்கின்றோம்.

## மின்சாரசபையின் மோசடிகளுக்கு மக்கள் பலிக்கடாவா?

# மின்சாரசபையின் உண்மை நிதி விபரங்களை எதிர்வரும் வாரம் ஆவணங்களுடன் வெளிப்படுத்துவேன்

### உதய கம்மன்பில சூளுரை

(கொழும்பு)

மின்சார சபையின் மோசடி மற்றும் முறை கேடுகள் நாட்டு மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது. மின்சார சபையின் உண்மையான நிதி நிலைமை விபரங்களை எதிர்வரும் வாரம் ஆவணங்களுடன் வெளிப்படுத்துவேன் என்று பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் காரியாலயத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (13) சிவில் அமைப்புக்கள் மற்றும் இடதுசாரி அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, தவறான தரவுகள் மற்றும் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு மின்கட்டணம் 15 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மின்கட்டண அதிகரிப்புக்காக மின்சார சபை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவில் முன்வைத்த தரவுகளில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்படுகின்றன.

எதிர்வரும் ஆறு மாத காலத்துக்கு மழை வீழ்ச்சி கிடைக்காது என்று மின்சார சபை முன்வைத்துள்ள விடயம் முற்றிலும் தவறானது. மின்சார சபையின் மோசடி மற்றும் முறைகேடுகள் நாட்டு மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது. மின்சார சபையின் உண்மையான நிதி நிலைமை விபரங்களை எதிர்வரும் வாரம் ஆவணங்களுடன் வெளிப்படுத்துவேன்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் மின்கட்டணத்தை மூன்றில் ஒரு பங்காக குறைப்பதாகக் குறிப்பிட்டார். ஆனால் தற்போது சர்வதேச நாணய நிதியத்தை திருப்திப்படுத்துவதற்காக மின்கட்டணம் 15 சதவீதத்தால் உயர்வடைந்துள்ளது.

சுயாதீன இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அதிகாரத்தை குறைத்து மின்கட்டணம் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை நிதியமைச்சுக்கும் வலுசக்தி அமைச்சுக்கும் வழங்கும் வகையில் புதியசட்டவரைவினை அரசாங்கம் தயாரித்துள்ளது.

இந்தச் சட்ட வரைவு நிறைவேற்றப்பட்டால் மின்கட்டணம் தொடர்பில் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலையீடு இரத்துச் செய்யப்படும் என எச்சரிக்கை விடுத்தார். (ம-4,7)

# நல்லூர் பிரதேச சபையின் கழிவுகள் இனி காரைக்காலில் கொட்டப்படாது

### தவிசாளர் மயூரன் அதிரடி அறிவிப்பு

(கொக்குவில்)

காரைக்கால் திண்மக் கழிவு அகற்றல் நிலையத்தில் புதிதாகக் கழிவுகளைக் கொட்டுகின்ற செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்படும் என நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப.மயூரன் தெரிவித்துள்ளார்.

நல்லூர் பிரதேச சபையின் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டதை அடுத்து உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

நல்லூர் பிரதேச சபையின் உட்கட்டுமான வசதிகளை மேம்படுத்துவதிலும் நல்லூர் பிரதேச சபையினைத் தூய்மையான அழகிய நகராக மாற்றுவதிலும் எனது கவனம் இருக்கும்.

அண்மைக்காலமாக காரைக்கால் திண்மக் கழிவு அகற்றல் இடத்தில் நடைபெறுகின்ற சமூக சீர்கேடான மற்றும் சமூக விரோத செயல்கள் தொடர்பிலும் கவனம் செலுத்துகின்றேன்.

எமது கடந்த ஆட்சிக் காலத்தின் இறுதிக் காலகட்டத்தில் குறித்த இடத்தினை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் என்னால் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் குறுகிய காலத்தில் அவை செயல் வடிவம் பெறவில்லை.

இந்நிலையில் நான் மீண்டும் நல்லூர் பிரதேச சபையின் தவிசாளராகப் பதவியேற்றுள்ள இன்றைய நாளிலிருந்து (நேற்று) மிக விரைவில் காரைக்கால் திண்மக் கழிவு அகற்றல் நிலையத்தில் புதிதாகக் கழிவுகளைக் கொட்டுகின்ற செயற்பாடுகள் அனைத்தும் முற்றாக நிறுத்தப்படும்.

அத்துடன் எதிர்வரும் காலங்களில் அங்கிருக்கின்ற கழிவுகள் படிப்படியாக அகற்றப்பட்டு அப்பிரதேசத்தின் தன்மை பாதுகாக்கப்படுவதுடன் காரைக்கால் திண்மக் கழிவு அகற்றலுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அப்பகுதி சபையின் வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப் படும் என்று உறுதியளிக்கின்றேன் என்றார். (ம-4,7)

## அடிக்கல் நாட்டு விழா

யாழ்ப்பாணம் தொல்புரம் மேற்கு மணிவாசகர் சனசமூக நிலையக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டல் நிகழ்வானது இன்று சனிக்கிழமை பி.ப 02.00 மணியளவில் மணிவாசகர் சனசமூக நிலையத் தலைவர் வே.நிஷாந் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ம-4,7)

# நாட்டிய நாடகத் தொகுப்பு நூலின் இரண்டாம் பாகம் வெளியீட்டு விழா

இணுவிலைச் சேர்ந்த கலாபூஷணம்.பண்டிதை வைகுந்தம் கணேசபிள்ளை எழுதிய நாட்டிய நாடகத் தொகுப்பு நூலின் இரண்டாம் பாகத்தின் வெளியீட்டு நிகழ்வு இன்று சனிக்கிழமை (14) பிற்பகல் 02 மணியளவில் இணுவில் பொது நூலகக் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்மறைக் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட ஓய்வு நிலைப் பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராஜா பிரதம [illegible] திருநெறிய [illegible] விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ம-4,7)

# போதை மாத்திரைகளுடன் பாசையூரில் இளைஞன் கைது

10 போதை மாத்திரைகளுடன் பாசையூரில் இளைஞன் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா நேற்று நடைபெற்றது.

குறித்த பகுதிக்கு 25 வயதுடைய இளைஞன் ஒருவர் போதை மாத்திரைகளை விற்பனை செய்ய வந்தவேளை கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டது.

சந்தேகநபரை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-4,7,104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாடுகளின் இனப்பெருக்கச் சிக்கல்களும் பொருளாதாரத் தாக்கமும்

மாடு வளர்ப்பில் இனப்பெருக்க முகாமைத்துவம் முக்கியமானது. ஒரு மாடு சினைப்பட்டு கன்றை ஈனும் போதுதான் பால் கிடைக் கும். எனவே கறவை மாடு வளர்ப் பின் அடிப்படையே மாடுகள் சினைப்படுவது தான். இயற்கை யில் மாடுகள் சினைப்படுதல் இலகுவானது கிடையாது. பல காரணிகளால் அச் செயற்பாடு தடைப்படுகின்றது. தாமதமடை கிறது.

முன்னைய காலத்தில் இயற் கையில் பசுமாடுகளும் காளை களும் ஒருங்கே காணப்பட்டு ஒரே விகிதத்தில் கன்றுகள் பிறந் தன. அப்போது வாழ்ந்த நாட்டு மாடுகள் பாலுற்பத்தி குறைந் தவை என்பதுடன் இரண்டு மூன்று வருடங்களுக்கு ஒரு முறைதான் கன்றையும் ஈன்றன. மனிதர்களுக்கு பால் தேவையும் அதிகமாக இருந்திராத அன்றைய சூழலில் மனித குடித்தொகையும் குறைவாகவே இருந்தது. தற் போது அப்படியா? இன்றைய உலக குடித்தொகை 8 பில்லிய னையும் கடந்துள்ளது. மனித உணவுத் தேவையின் மிக முக் கிய பண்டமாகிய பாலின் தேவையும் அதிகரித்துள்ளது. சோயா. ஓட்ஸ் போன்ற மாற்றுப் பால் உற்பத்தி மூலங்களின் கண்டுபிடிப்பும் ஆடு. லாமா. ஒட்டகம் போன்ற ஏனைய விலங்குகளின் பாலுற்பத்தியும் சேர்ந்துள்ள நிலையில் இன்னும் கறவை மாடுகளின் பாலும் எருமைகளின் பாலுமே மனித பால் நுகர்வைப் பூர்த்தி செய் கின்றன.

அதிக பால் தரும் இயந்திரங் களாக நவீன பசுக்கள் உருவாக் கப்பட்டுள்ளன. சிறந்த ஊட்டச்சத் தும் செயற்கைச் சினைப்படுத்தலு டன் கூடிய தேர்வும் கறவை மாட்டு இன உருவாக்கத்தையும் பாலுற்பத்தியையும் அதிகரித்துள் ளன. எனினும் பாலுற்பத்தி அதி கரித்த அளவுக்கு ஏனைய காரணிகள் வளர்ச்சியடைய வில்லை. குறிப்பாக இனப்பெருக்க ஆற்றல். முன்பு மாடுகள் தம் வாழ்நாளில் எட்டு. பத்து கன்று களை ஈன்றிருந்தன. எனினும் பாலுற்பத்தி இயந்திரங்களான நவீன பசுக்கள் மூன்று கன்று களுக்கு மேல் ஈனுவதில்லை. அவை சினைப்பட சிரமப்படு கின்றன. சினை அறிகுறி களை காட்டுவதில்லை. கருச் சிதைவு ஏற்படுகிறது. கன்றைத் தாங்க முடியாத பலவீனமான கருப்பை உருவாகிறது. பல உற்பத்தி நோய்கள் தோன்று கின்றன.

நவீன கால்நடை வளர்ப்பைச் சிறப்பாக செய்யும் நாடுகளில் மூன்று கன்று ஈன்ற மாடுகள் இறைச்சிக்கு வழங்கப்படுகின்றன (மூன்று கன்றுகளுக்கு மேல் மாடுகளில் இனப்பெருக்க ஆற்றல் குறைவதோடு பால் காய்ச்சல். கீட்டோசிஸ் போன்ற பல உற்பத்தி நோய்களும் தோன்றுவதாக பல ஆய்வுகள் கூறுகின்றன). மேலை நாட்டுப் பண்ணைகள் உற்பத்தி வருமானம் மற்றும் செலவு போன்ற வற்றை மாத்திரமே கருத்திற் கொள் கின்றனர். மாடு ஒரு இயந்திரம். பயன் குறையத் தொடங்கினால் தூக்கி எறிந்துவிட்டு அடுத்த வலுவு டைய இயந்திரத்தைத் தேடுகின்ற னர். இலங்கை. இந்தியாவில் அப்படி இலகுவில் செய்துவிட முடியாது. கலாசாரப் பின்புலம் மாடுகளுடன் நெருக்கமானது. வளர்ப்பு பசுக்களை இலகுவில் கொல்ல முடியாது. விபத்தில் அங்கவீனமான மாடு களை கருணைக் கொலை செய் யவே பலர் மறுப்பார்கள்.

இந்த நிலையில் கறவை மாடு களுக்கு ஏற்படும் சினைப்படுதல் தொடர்பான சிக்கல்களை தீர்த்துக் கொண்டு பாலுற்பத்தியுடன் சமாந்த ரமாக செல்லுதல் அவசியமாகிறது. இலங்கையின் கால்நடைகள் வாழும் பகுதிகளின் அடிப்படையில் இனப்பெருக்க கொள்கை (Breeding policy) உள்ளது. ஒவ்வொரு காலநிலை வலயத் துக்கும் பொருத்தமான கால் நடைகள் தொடர்பாக இதில் தெளிவாக விளக்கம் தரப்பட் டுள்ளது. இந்தக் கொள்கைக்கு முரணாக மாடுகளை வளர்க்கும் போது அவை சிக்கல்களைச் சந்திக் கின்றன. அவற்றில் முக்கியமா னவை இனப்பெருக்கம் சார்ந்தவை. உதாரணமாக உலர் வலயத்துக்கு பொருத்தமற்ற தூய ஐரோப்பிய இனங்களை வளர்க்கும் போது அவை சினைப்பிடிப்பதில் சிரமப்படு கின்றன. வெப்ப அயர்ச்சி காரண மாக கருத்தங்குவது நிகழாது. உலர் வலயத்தில் அதியுற்பத்தியுடைய மாடுகளின் அடிப்படைச் சுகாதார மற்றும் இனப்பெருக்க விடயங் களை பேணுவது சிரமமாகும். மேலும் அண்மைக் காலத்தில் உலக வெப்ப முறல் காரணமாக சராசரியாக குளிர் காலநிலையுடைய இடங்களின் வெப்பநிலை கூட கணிசமாக உயர்ந்துள்ளது. இங்கு வளர்க்கப்படும் ஐரோப்பிய வகை மாடுகளே சினைப்படுவதில்லை.

பொதுவாக சில மாடுகளில் நோய் ஏற்படும் போது கருப்பை பாதிக்கப் படுகிறது. சில நுண்ணுயிர்கள் கன்று ஈன்ற ஆரம்ப நாட்களில் கருப்பைக்குள் சென்று தொற்றை ஏற்படுத்துகின்றன. நஞ்சுக் கொடி விழாமை. கருப்பை வெளித் தள் ளுதல் போன்ற நிலைகள் சரியாக கவனிக்காமல் விட்டால் மாடு மலடாக வாய்ப்புள்ளது.

மேலும். இலங்கையின் பல கால்நடைகள் சினைப்பருவ அறிகுறி களை சரியாக காட்டுவதில்லை. நுண் ஊட்டச்சத்துக் குறைவு மற் றும் வெப்ப அயர்ச்சி இதன் பிரதான காரணிகளாகும். இலங்கையி லுள்ள பெரும்பாலான மாடுகளுக்கு சரியான ஊட்டப் பெறுமானமுள்ள உணவு சரியான அளவில் கிடைப் பதில்லை. திட்டமிடப்படாத விவசாய மற்றும் நீர்ப்பாசன கொள்கைகள் காரணமாக உலர் வலயத்தில் வாழும் மேய்ச்சலை நம்பிய மாடுகளுக்கு மேய்ச்சல் நிலம் வருடா வருடம் குறைவடைகி றது. நெல் உற்பத்தியை மாத்திரம் அடிப்படையாக கொண்டு பல நீர்ப்பாசன மற்றும் விவசாய வேலைத்திட்டங்கள் காரணமாக அங்கு இயற்கையாக மேய்ந்த மாடுகளுக்கு மேய்ச்சல் தடைப் படுகிறது. அவை தினமும் பல கிலோமீட்டர் பயணிக்க வேண்டி யுள்ளது. இதனால் மாடுகள் மெலிவதோடு மிகக் கடுமையான அழுத்தத்துக்கும் உள்ளாகின்றன. வளர்ச்சி மற்றும் இனப்பெருக் கத்துக்கு தேவையான ஊட்டச் சத்துக்கள் கிடைப்பதில்லை.

இதனால் முக்கியமான உடற் திரவங்களின் சுரப்பு பாதிக்கப் படுவதால் இனப்பெருக்கம் சார்ந்த பல பிரச்சினைகளும் தோன்று கின்றன. இலங்கையில் உள்ள மாடுகளில் அதிகளவானவை இனப் பெருக்க ஆற்றல் தற்காலிக மாகவோ நிரந்தரமாகவோ பாதிக்கப்பட்ட நிலையிலேயே உள்ளவை.



Dr. எஸ்.கிருபானந்தகுமாரன் (MVSc)
கால்நடை வைத்தியர்.

இவற்றை உற்பத்தியற்ற விலங்குகளாகவே கருதமுடி யும். இந்த வகை விலங்குகள் பாலையும் கன்றுகளையும் தராததுடன் உணவுக்காக உற் பத்தி விலங்குகளுடன் போட்டி போடுகின்றன. அண்மைக் காலத் தில் மேய்ச்சல் தொடர்பான பிரச்சி னைகளால் பல பண்ணையாளர் கள் தம் மாடுகளை இறைச்சிக்கு விற்கும் நிலை அதிகரித்துள்ளது.

வெப்ப அயர்ச்சி காரணமாக இனப்பெருக்கத்துக்கு தேவை யான ஓமோன்களின் செயற்பாடு பாதிக்கப்படுகின்றது. இதனால் சினை அறிகுறிகள் உருவாகாது என்பதுடன் கருத்தங்க முடியாது கருச் சிதைவு தோன்றுகிறது. (பல இடங்களில் ஆரம்ப நிலைக் கருச் சிதைவை பண்ணையாளர்கள் கண்டுபிடிக்காது விடுகின்றனர். கடைசிவரை மாடுகள் சினைப் பட்டதாகவே கருதி காத்திருப் பார்கள். இது தேவையற்ற செலவைத் தருகின்றன. சினைப் படாத ஒவ்வொரு நாளும் பொரு ளாதார ரீதியான சுமையே)

இதனைவிட அண்மைக் காலத்தில் அதிகளவில் குடற்புழுக் கள் மற்றும் ஒட்டுண்ணிகளின் தாக்கம் கால்நடைகளில் அவதா னிக்கப்பட்டுள்ளது. இவை கால் நடைகளின் உணவு மாற்று திறன், வளர்ச்சி வீதம், ஏனைய நோய்களின் தொற்று ஆகிய வற்றில் செல்வாக்குச் செலுத்து கின்றன. இந்த விடயங்கள் ஒன்றாகச் சேர்ந்து இனப்பெருக்க திறனை கடுமையாகப் பாதிக் கின்றன. மேலும் கால்வாய் நோய். புருசலோசிஸ் நோய் களும் இனப்பெருக்க ஆற்றலை பாதிக்கின்றன.

மேற்படி காரணங்களுக்கு மேலதிகமாக முகாமைத்துவக் காரணிகளும் கறவை மாடுக ளின் இனப்பெருக்க ஆற் றலைப் பாதிக்கின்றன. இவற்றின் கூட்டு விளைவுகள் மாடுகள் சினைப் படுவதை பாதிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆட்சியமைக்க...

கள் மற்றும் ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்" என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் தெரிவின் பின்னர் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, "யாழ்ப்பாணம் மாநகர சபையில் அதிக ஆசனங்களைத் தமிழரசுக் கட்சியே பெற்றுக்கொண்டது. இதனடிப்படையில் மேயர் மற்றும் துணை மேயரை நிறுத்தி வெற்றியையும் பெற்றுள்ளோம்.

இதற்கு ஒத்துழைத்த எமது கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களுக்கும் நாம் இந்த நேரத்தில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த உள்ளூராட்சி சபைகளில் எந்தத் தரப்பினர் அதிகூடிய ஆசனங்களைப் பெற்றிருக்கின்றார்களோ அவர்களே ஆட்சி அமைக்க வேண்டும் என்று ஆரம்பத்திலேயே நாங்கள் கூறியிருந்தோம்.

அந்தக் கோட்பாட்டுக்கு அமைவாக யாழ்.மாநகரத்தில் நாங்கள் செயற்பட்டிருக்கின்றோம். இந்தக் கோட்பாட்டுக்கு வேறு சில கட்சிகளும் இணங்கியிருந்தன. எங்களோடு நடைபெற்ற பேச்சுவார்த்தைகளிலும் அவர்கள் அதனைத்தெரிவித்திருந்தனர். ஆனால், அந்தக்கோட்பாட்டை அவர்கள் தற்போது மீறியுள்ளனர்" என்றார். (ம-7,4,33)

## எதிர்வரும்...

பாராளுமன்றச் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற அமர்வு இடம்பெறும் இந்த ஒவ்வொரு தினத்திலும் மு.ப. 9.30 முதல் மு.ப. 10.00 மணி வரை நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள (1) முதல் (6) வரையான பாராளுமன்ற அலுவல்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மு.ப. 10.00 மணி முதல் மு.ப. 11.00 மணி வரை வாய்மூல விடைக்கான வினாக்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், மு.ப. 11.00 மணி முதல் மு.ப. 11.30 மணி வரை நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் வினாக்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. (ம-7,4)

## வடமராட்சி...

பியன்பற்றுப் பகுதியில் உழவு இயந்திரம் பாவித்து கரைவலை தொழில் செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டது. இதனை மீறி அங்கு சிலர் உழவு இயந்திரத்தைப் பயன்படுத்தி கரைவலை தொழில் செய்து வந்தனர்.

இந்நிலையில், நேற்று நண்பகல் 12 மணியளவில் செம்பியன்பற்று சென்.பிலிப் நேரியார் கடற்றொழிலாளர் சங்க உறுப்பினர்கள் என தம்மை அடையாளப்படுத்திக்கொண்ட சிலர் தடிகளுடன் கரைவலை வாடிகளுக்குச் சென்று அங்கிருந்த மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த மீனவர் ஒருவர் மருதங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்பு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்த வன்முறைச் சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,4)

## நல்லூர்...

நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் தெரிவிக்கான கூட்டம் உள்ளூராட்சி ஆணையாளரின் தலைமையில் பிரதேச சபையின் சபா மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மதியம் நடைபெற்றது.

அதன்போது தமிழ்மக்கள் கூட்டணியின் சார்பில் ப.மயூரன் பரிந்துரைக்கப்பட்ட நிலையில், வேறு யாரும் போட்டியிடாதமையால் மயூரன் தவிசாளராக ஏகமனதாகத் தெரிவானார்.

அதேவேளை ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் உறுப்பினர் தவிசாளர் தெரிவில் சபையில் இருந்து வெளியேறியிருந்தார்.

தமிழ் மக்கள் கூட்டணியும் தமிழரசுக் கட்சியும் நல்லூர் பிரதேச சபையில் ஆட்சி அமைப்பது தொடர்பில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றினை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் உப தவிசாளராக ஜெயகரன் தெரிவாகியுள்ளார். (ம-4,7,33)

## சாவகச்சேரி...

சாவகச்சேரி நகரசபையின் தவிசாளர் மற்றும் உபதவிசாளர் தெரிவு நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபு தலைமையில் இடம்பெற்றது.

தவிசாளர் பதவிக்கு தமிழரசுக் கட்சி சார்பில் அ.கயிலாயபிள்ளையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பாக வ.சிறிபிரகாஸும் முன்மொழியப்பட்டு பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்போது தமிழரசுக் கட்சியின் தவிசாளர் வேட்பாளர் அ.கயிலாயபிள்ளை தமிழரசு மற்றும் ஈ.பி.டி.பி உறுப்பினர்களுடைய ஆதரவோடு 7 வாக்குகளைப் பெற்றிருந்தார்.

அதேநேரம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தவிசாளர் வேட்பாளருக்கும் 7 வாக்குகள் கிடைத்திருந்தது.

அதன்பின்னர் திருவுளச்சீட்டு ஊடாக தவிசாளர் தெரிவு செய்யும் நடைமுறைக்குச் செல்லப்பட்டதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தவிசாளர் வேட்பாளர் வ.சிறி பிரகாஸ் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

மேலும் உப தவிசாளர் தெரிவிலும் தமிழரசு சார்பில் அ.பால மயூரனும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிசார்பில் ஞா.கிஷோரும் போட்டியிட்டு சம வாக்குகளைப் பெற்றிருந்த நிலையில் திருவுளச் சீட்டு மூலம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் கிஷோர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

வாக்கெடுப்பின் போது தேசிய மக்கள் சக்தி நடுநிலைமை வகித்திருந்தது.

தமிழ்த் தேசிய மக்கள்முன்னணி சார்பில் சாவகச்சேரி நகரபைக்கு பிரேரிக்கப்பட[illegible] உறுப்பினர் ஒருவருக்கு நீதிமன்றால் நேற்று இடைக்காலத் தடை விதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே திருவுளச்சீட்டு நடைமுறை வரை செல்ல வேண்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,4,30,33)

## கவுணாவத்தை நரசிங்க வைரவராலய மரபுவழி வேள்விப் பொங்கல் இன்று

கீரிமலை கருகம்பனை கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலய வருடாந்த மரபுவழி வேள்விப் பொங்கலானது இன்று சனிக்கிழமை அதிகாலை 02.00 மணியளவில் விசேட பூஜை வழிபாடுகளுடன் ஆரம்பமாகவுள்ளது.

வேள்விப் பொங்கலைத் தொடர்ந்து கிடாய்கள், சேவல்கள் நரசிங்க வைரவருக்குக் காணிக்கையாக்கப்பட்டு நேர்த்திகள் நிறைவேற்றப்படவுள்ளது. எட்டாம் மடை உற்சவம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது. (ம-4, 7)


மஹஜன சம்பத — திகதி 2025.06.13 — சீட்டிழுப்பு இலக்கம் 5859 — Q 2 8 3 7 7 3 — அத சம்பத Q 3 7 7 3 — சீட்டிழுப்பு இலக்கம் 0434 — National Lotteries Board

தன நிதானய — திகதி - 2025.06.13 — சீட்டிழுப்பு இலக்கம் - 1889 — U 04 49 57 62 U — Double Chance 29256

மெகா பவர் — திகதி 13/06/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2207 — E 07 03 14 15 34

ஜய — திகதி 2025.06.13 — சீட்டிழுப்பு இலக்கம் 0127 — V 2 2 7 6 — NLB

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4101 — சீட்டிழுப்பு திகதி 13.06.2025 — G 04 06 49 73 — G

ஹந்தஹன HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.06.13 — சீட்டிழுப்பு இலக்கம் 1168 — மீனம் 01 29 48 58 மீனம் — 23446 — 25

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிரி தன சம்பத — 13.06.2025 — வெற்றி வாரம் 567 — V 9 8 7 4 0 6 — 65333 — அடுத்த சுப்பர் ஜெக்பொட் ரூ.21,108,802.40 — DLB — வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2833 — சீட்டிழுப்பு திகதி 2025.06.13 — தினம் வெள்ளிக்கிழமை — 19 20 37 47 Y — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.68,037,204.80 — DLB

சனிதா — திகதி 13.06.2025 — வெற்றி வாரம் 4994 — 17 26 30 45 T — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 67,168,466.40 — 73109 — DLB

சசிரி — வெற்றி வாரம் 703 — சீட்டிழுப்பு திகதி 13.06.2025 — வெள்ளிக்கிழமை — 23 24 46 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4545 — சீட்டிழுப்பு திகதி 13.06.2025 — தினம் வெள்ளிக்கிழமை — 24 41 42 53 — கும்பம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,326,072.40 — 149369 — DLB

ஜப்பர — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — V 24 03 16 52 67 — 2009 — 13.06.2025 வெள்ளிக்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.578,002,014.80 — DLB — வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI — வெள்ளிக்கிழமை — வெற்றி வாரம் 2659 — சீட்டிழுப்பு திகதி 2025.06.13 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,504,519.20 — 12 17 26 35 P — 140744 — DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோழி வளர்ப்போருக்கு

இத்தாலியில் (Italy) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கோழி குஞ்சு பொரிக்கும் இயந்திரம் (Egg Incubator) ஒரே நேரத்தில் 49 கோழி முட்டைகளை அடைகாக்கும் அரை தானியங்கி இயந்திரம் இப்பொழுது எம்மிடம். அத்துடன் விரும்பிய பறவைகளின் முட்டைகளையும் பயன்படுத்தலாம். இது ஒரு இத்தாலி (Italy) நாட்டின் தயாரிப்பு

"நாங்கள் உங்களோடு"

**ஆர்.என். கம்பனி**



- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

(4544)

Hotline: 071 535 7799 / 071 535 7803

## தவறிவிட்டது

கந்தன் சிவசுப்பிரமணியம் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (570431137V) ஏழாலைக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஏழாலை தேவி கோயிலுக்கு முன்பாக உள்ள சுரேஸ் கடை அல்லது ஏழாலை தபால் நிலையத்தில் ஒப்படைத்து உதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

(4540)

**074 260 3213**

## காணி, வீடு விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை பிள்ளையார் கோயில் சூழலில் 4 பரப்பு வீடு கட்டக்கூடிய காணியும், புதிய வீடும் (4 பரப்பு) விற்பனைக்கு உண்டு.

(4528)

**077 129 8159**

## உடனடி வேலை வாய்ப்பு

### நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- திருகோணமலை
- கோப்பாய்
- பண்டத்தரிப்பு
- கொழும்பு
- சுன்னாகம்
- மானிப்பாய்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- புத்தூர்
- சங்கானை

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

(C-3196)

## கனடா - வரி இல்லாமல்

### விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3970/- |
| 11-16 Kg | 2800/- |
| 21-30 Kg | 2640/- |

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

UK 11Kg - 1420/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- | Australia 11Kg - 1980/- | Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241 / 076 822 6237

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | -219/= | Max 3Kg |
| 1Kg Prima கோதுமை மா | -158/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | -256/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | -415/= | |
| 1Kg நவை | -295/= | Max 3Kg |
| 1Kg பொன்னி அரிசி | -249/= | |
| 1Kg ஈக்குத்திட்டல் பச்சை | -215/= | |
| 1Kg திட்டல்ப்பச்சை | -240/= | |
| 10Kg விஜிதா | -2800/= | |
| 1Kg மல்லி (M) | -355/= | |
| 1Kg உளுத்தம்பருப்பு | -749/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | -799/= | |
| 1Kg கடலை | -385/= | |
| 1Kg சோயா | -350/= | |
| 400g விம் கட்டி | -250/= | ~~265/=~~ |



400g Anchor 1040/= ~~1100/=~~



1Kg சவர்க்காரம் - பவுடர் 270/= ~~320/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.

(1226)

Happy Supermarket 0777 8080 30

## வைத்தியம்

கை விறைப்பு | கால் விறைப்பு | கை எரிவு | கால் எரிவு
குழந்தை இன்மை | நாட்பட்ட தலைவலி
மூலம் | கழுத்து வலி | கால் பாத விறைப்பு
முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி
தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்
நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669

(1220)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

## காணி விற்பனைக்கு

206/3 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள (4) நான்கு மாடிக் கட்டிடமும், 2 1/4 பரப்பு காணியும் விற்பனைக்கு உண்டு.

(4538)

தொடர்புகளுக்கு : **077 625 1447**

## மரண அறிவித்தல்



### திருமதி சிவமலர் டிவகலாலா (1945 - 2025)

முன்னாள் வடகிழக்கு மாகாண கல்வி, கலாச்சார, விளையாட்டுத்துறைச் செயலாளர் மறைந்த பெருமதிப்பிற்குரிய சுந்தரம் டிவகலாலா அவர்களின் அன்புத் துணைவியும் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. க. கணபதிப்பிள்ளை மற்றும் திருமதி க.செல்லம்மா அவர்களது சிரேஷ்ட புதல்வியுமான திருமதி சிவமலர் டிவகலாலா அவர்கள் (1945 - 2025) ஜூன் மாதம் 10ம் திகதி அதிகாலை இவ்வுலகை நீத்தார்.

சிறந்த மகளாக, சகோதரியாக, மனைவியாக, மைத்துனியாக, தாயாக, அம்மம்மாவாக, பிரஜையாகத் திகழ்ந்த பேரன்பிற்குரிய சிவமலர் அவர்களுக்கு ஜூன் 16ம் திகதி திங்கட்கிழமை அன்று யாழ்ப்பாணம், 127, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் மரியாதைகளையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளலாம் என்பதையும் அங்கு அவரது இறுதிக் கிரியைகள் மறுநாள் செவ்வாய்க்கிழமை அன்று (17ம் திகதி) காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் என்பதையும் அறியத் தருகிறோம்.

இல. 127,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(1224)

தகவல் :
பிள்ளைகள்

## காணி விற்பனைக்கு

நிலாவரை சந்திக்கு அருகில் முதலீட்டுக்கு சிறந்த 2 பரப்பாக பிரிக்கப்பட்ட 30 காணித் துண்டுகள்

- வங்கிக்கடன் பெறக்கூடிய தெளிவான ஆவணங்கள்
- போக்குவரத்துக்கு இலகுவான தார் வீதி
- நல்ல தண்ணீர் வளம்
- அமைதியான குடியிருப்புள்ள சூழல்
- பரப்பு 17 லட்சம் ரூபா, உடன் கொள்வனவு செய்பவருக்கு 10% கழிவு உண்டு.

(4513)

தொடர்புகளுக்கு :
**077 082 1010, 075 676 4346**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் ஊரெழுவில் பலாலி வீதிக்கு அருகாமையில் 6 பரப்பு காணி விற்பனைக்கு

- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- பலாலி வீதி ஊரெழு பிள்ளையார் கோயில் முன்வீதி 150m தூரத்தில்
- நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், செம்மண் காணி,
- குடியிருப்புக்கள் சூழவுள்ள காணி

(4545)

பார்வையிடும் நேரம் காலை 8மணி முதல் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு :
**076 739 0413, 077 623 4204**

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org